# வானவில்

# VAANAVIL

இதழ் - 95 | ISSUE – 95

கார்த்திகை 2018 | NOVEMBER 2018


# ஜனாதிபதி கொலை முயற்சியே இலங்கையில் எழுந்துள்ள நிலைமைக்கு அடிப்படைக் காரணமாகும்!



எமது கடந்த மாத (ஐப்பசி – 2018) வானவில் இதழின் முன்பக்க கட்டுரையின் தலைப்பு இவ்வாறு அமைந்திருந்தது:

**‘‘நாட்டு மக்களே, ஆட்சி மாற்றத்துக்கு தயாராவீர்!’’**

அந்தக் கட்டுரையில் நாம் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தோம்:

**‘‘இந்த அரசு எந்த நேரமும் கவிழலாம் என்ற நிலை தோன்றியுள்ளது. ஆட்சியின் வீழ்ச்சி என்பது ஜனாதிபதி தேர்தல் அல்லது பொதுத் தேர்தல் என்பனவற்றின் மூலமும் நடைபெறலாம் அல்லது அதற்கு முதல் வேறு வழிகளிலும் நடைபெறலாம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.**

**ஆனால் நாட்டு மக்கள் ஆட்சி மாற்றமொன்றை விரும்பினாலும், இந்த அரசைப் பதவிக்கு கொண்டு வந்த ஏகாதிபத்திய சக்திகளும், அவர்களது உள்நாட்டு அடிவருடிகளும் அதற்கு இலேசில் இடம் கொடுக்க விரும்பமாட்டார்கள். அவர்கள் சகல வழிகளிலும் நாட்டில் ஒரு ஏகாதிபத்திய விரோத, முற்போக்கு அரசு ஏற்படுவதைத் தடுக்கும் கடும் பிரயத்தனங்களில் ஈடுபடுவர்.**

**எனவே, மக்கள் விரோத சக்திகளைக் குறைத்து மதிப்பிடாமல், சகல ஏகாதிபத்திய விரோத, முற்போக்கு, ஜனநாயக சக்திகளையும் ஒரு பரந்துபட்ட அணியில் திரட்டுவது முற்போக்கு சக்திகளின் வரலாற்றுக் கடமையாகும். இந்தப் பணி இன்றைய ஆட்சியின் கீழ் பல இன்னல்களைச் சந்தித்து வரும் தமிழ், முஸ்லீம், மலையக மக்களினதும் கடமையாகும்.**

**‘‘ஆட்சி மாற்றம்’’ என்ற சொல் அனைத்து மக்களினதும் தாரக மந்திரமாக ஒலிக்க வேண்டும்’’.**

எமது இந்தக் கட்டுரையைத் தொடர்ந்து நாட்டில் யாருமே எதிர்பாராத வகையில் பல அரசியல் மாற்றச் சம்பவங்கள் நடந்தேறியுள்ளன.

நாம் வானவில் பத்திரிகையில் சுட்டிக்காட்டியவாறு தேர்தல் ஒன்று நடைபெறாமலே ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டு, அந்த மாற்றத்தைத் தாங்கிக் கொள்ளாத உள்நாட்டு பிற்போக்கு சக்திகளும், அவற்றின் சர்வதேச எஜமானர்களும் ஓரணியில் திரண்டு நின்று சன்னதம் ஆடுகின்றனர். அதன் காரணமாக நாடு பெரும் குழப்ப நிலையில் ஆழ்ந்துள்ளது.

**தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க...**

**நூறு சிந்தனை மலரட்டும்**

# இலங்கையின் இறைமைக்கு தொடர்ச்சியாக விடுக்கப்படும் சவால்கள்

கடந்த ஒக்ரோபர் 26ந் திகதி இலங்கையின் புதிய பிரதமராக மகிந்த ராஜபக்ச பதவியேற்றார். இதனைத் தொடர்ந்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இலங்கையின் அரசியல் நிலவரம் மீண்டும் ஒரு பேசுபொருளாகிவிட்டது. இதன் அர்த்தம் இலங்கை ஏதோ அமைதியான சுபீட்சம் நிறைந்த நாடாக இருந்தது. ஆனால் சடுதியாக நிகழ்ந்த அரசியல் சூறாவளியால் எல்லாம் தலைகீழாகி விட்டது என்றாகிவிடாது. இலங்கையைக் கொதிநிலையில் வைத்திருக்க வேண்டுமென்ற சூழ்ச்சித்திட்டங்கள் தொடர்ச்சியாக பேணப்பட்டு வருகின்றன என்பதையே இன்றைய நிலைமைகள் தெளிவாகக் காட்டுகின்றன.

ஏறத்தாள 30 ஆண்டுகாலம் உள்நாட்டு யுத்தம் நிகழ்ந்த காலத்தில் இலங்கையின்பால் இருந்த கவனம், 2009 ஆம் இலங்கையின் உள்நாட்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக மறையத் தொடங்கியிருந்தது என்றே பலரும் எண்ணியிருந்தனர். ஆனால் உண்மை அப்படியானதல்ல. ஏனெனில் இலங்கையில் பயங்கரவாதத்தை விதைத்தவர்கள், பயங்கரவாதம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் ஓய்ந்திருக்கமாட்டார்கள் என்பதையே இலங்கையில் தொடர்ச்சியாக நடந்தேறும் நிகழ்வுகள் காட்டி வந்துள்ளன, காட்டி வருகின்றன.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில், உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த மகிந்த தலைமையிலான அரசு தோற்கடிக்கப்பட வேண்டுமென்று செய்யப்பட்ட பல்வேறு வகைப்பட்ட சக்திகளின் முனைப்புகளும், அத்தேர்தலில் மகிந்த தோற்கடிக்கப்பட்ட பின்னர் இலங்கையில் மீண்டும் 'ஜனநாயகம்' மலர்ந்து விட்டதாக சோடிக்கப்பட்டதும், இலங்கை மக்கள் தங்கள் அடிமைச்சங்கிலிகளை உடைக்க இன்னும் வெகுதூரம் பயணிக்க வேண்டும் என்பதையே தெளிவாகக் காட்டியிருந்தன. மகிந்த தலைமையிலான அரசினை அகற்ற அரும்பாடுபட்ட பல்வேறு வகைப்பட்ட சக்திகளே, இப்போதும் இலங்கையில் ஏதோ 'ஜனநாயகம்' செத்துவிட்டதாகப் பிதற்றித் திரிகின்றனர்.

இலங்கையில் எதிர்காலத்தில் இடம்பெறவிருந்த பெரியதொரு சதி முயற்சி முளையில் கிள்ளி எறியப்பட்டுள்ளது என்பதை உலக வரலாற்றினை நுண்ணியமாக ஆராய்பவர்களாலேயே பகுத்தறிய முடியும். சுருக்கமாகக் கூறுவதாயின், நவீன தாராளமயவாதத்தின் தென்னமெரிக்க பரிசோதனை என்றழைக்கப்படும், 1973 செப்டம்பர் மாதம் 11ந் திகதி சிலி நாட்டில் நடந்த ஆட்சிக்கவிழ்ப்பு மாதிரியான நிகழ்வு இலங்கையில் தவிர்க்கப்பட்டுள்ளது என்பதை உறுதியாகவே சொல்ல முடியும். ரஷ்சியப் புரட்சியின் நூற்றாண்டு நினைவாக எழுதப்பட்ட, 'புரட்சியும் எதிர்ப்புரட்சியும் 1917-2017' (Revolution and Counterrevolution, 1917–2017) என்ற கட்டுரையில் மன்த்லி ரிவ்யூவின் (Monthly Review) ஆசிரியரான பேராசிரியர் John Bellamy Foster சிலிப்புரட்சி தோற்கடிக்கப்பட்ட விதம் தொடர்பாக பின்வருமாறு கூறுகின்றார்:

'1970இல் சிலியில் பொப்புலர் யூனிட்டி (Popular Unity) அரசின் தலைவராக ஜனநாயகபூர்வமாக தேர்ந்தெடுக்கப்பட்ட சால்வடார் அலெண்டே (Salvador Allende) சிலியில் சோஷலிசத்தை கொண்டுவருவதாக அறிவித்தார். அதன் முதற்கட்டமாக, அந்நாட்டின் பெரு நிறுவனங்களில் முதலீடு செய்திருந்த அமெரிக்க பெருநிறுவனங்களின் சொத்துக்களை அந்த அரசு தேசியமயமாக்கியது. 1970-ல் மார்க்சிய-சோஷலிச சார்பு இதழான மன்த்லி ரிவ்யூவின் வெளியீட்டாளர்களான ஹேரி மக்டாப் (Harry Magdoff), போல் ஸ்வீசி (Paul Sweezy) ஆகியோரை அதிபர் அலெண்டே தனது அரசின் துவக்க விழாவிற்கு அழைத்திருந்தார். மக்டாப் மற்றும் ஸ்வீசி அலெண்டேயின் நீண்ட நாள் நண்பர்களாவர். துவக்கவிழா நிகழ்ச்சியில், அமெரிக்காவிற்கும் சிலி இராணுவத்திற்கும் உள்ள தொடர்பு, அதனால் ஏற்படக் கூடிய அபாயம், இதன் தொடர்ச்சியாக வாஷிங்டனால் ஏற்பாடு செய்யப்படும் ஆட்சிக் கவிழ்ப்பிற்கான வாய்ப்புகள் அதிகமாக இருப்பதாக அவர்கள் அலெண்டேவை எச்சரித்தார்கள். தற்போதுள்ள உலக ஒழுங்கிற்கு குந்தகம் ஏற்பட்டால், ஏகாதிபத்தியம் எத்தகைய சட்டங்களையும் மதிக்காது எனவும் மக்டாப்பும் ஸ்வீசியும் எச்சரித்தனர்.

உண்மையிலேயே மூன்றாண்டுகளுக்குப் பின்னர், 1973 ஆம் ஆண்டு ஜெனரல் ஒகஸ்ரோ பினோசெ (Augusto Pinochet) மூலம் அலெண்டேவும் ஆயிரக் கணக்கானோரும் உயிரிழந்து, இரத்த வெள்ளத்தில் சிலியின் ஆட்சி கைப்பற்றப்பட்டது.
இவையனைத்தும் உணர்த்தும் வரலாறு, புரட்சிகள் உருவானாலும் கூட, அவை எதிர்ப்புரட்சியை எதிர்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்படும் என்பதாகும். உண்மையிலேயே கடந்த நூற்றாண்டின் புரட்சியையும் எதிர்ப்புரட்சியையும் மதிப்பீடு செய்யும்போது எதிர்ப்புரட்சியின் வலிமையையும் வீரியத்தையும் மிகுந்த அழுத்தத்துடனேயே மதிப்பீடு செய்ய வேண்டும். போராட்டங்களையும் தவறுகளையும் விரிவான வரலாற்று இயங்கியல் அடிப்படையில் பார்க்க வேண்டும்'

இலங்கையில் சிறுபான்மை அரசொன்றினை அமைத்துள்ள ஐக்கிய சுதந்திர மக்கள் கூட்டமைப்பினையோ அல்லது மைத்திரி, மகிந்த போன்றவர்களையோ சிலியின் 'பொப்புலர் யூனிட்' மற்றும் சால்வடார் அலெண்டேயுடன் முழுமையாக ஒப்பிட முடியாது. ஏன் சிலியின் நிலைமைகளும் இலங்கையின் நிலைமைகளும் கூட வெவ்வேறானவை. ஆனால் 'மக்டாப்' மற்றும் 'ஸ்வீசி'யின் எச்சரிக்கைகளை பொருட்படுத்தமால் விட்டதால் சிலிக்கு நேர்ந்த விபரீதத்தை இலங்கை மாத்திரமல்ல, ஒவ்வொரு மூன்றாமுலக நாடுகளும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஜனாதிபதி மைத்தரியையும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபயவையும் தீர்த்துக்கட்டும் முயற்சி அம்பலத்திற்கு வந்ததென்பது ஓர் எச்சரிக்கையே. இதனை ஐக்கிய சுதந்திர மக்கள் கூட்டமைப்பினரும் மற்றும் மைத்திரியும் மகிந்தாவும் சரியாகக் கணக்கில் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றே தோன்றுகின்றது. அமெரிக்கா, கனடா, பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியமும் அவர்களது உள்ளூர் ஏஜெண்டுகளும் தமிழ் தேசியக்கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி, முஸ்லீம் காங்கிரஸ் போன்ற கட்சிகளும் சேர்ந்து, ரணில் விக்கிரமசிங்காவை பதவிக்குக் கொண்டுவர எடுக்கும் பிரயத்தனங்களை நோக்குமிடத்து, அவர்களின் சதித்திட்டம், அதாவது மைத்திரியையும் ராஜபக்ச குடும்பத்தினரையும் கொன்றுதள்ளி, இலங்கையில் நீண்டகாலத்திற்கு நவீன தாராளமயவாதத்திற்கு ஏதுவாக சர்வாதிகார ஆட்சியொன்றினை நிறுவும் எண்ணம், மயிரிழையில் நழுவவிடப்பட்டுள்ளது போன்றே தோன்றுகின்றது. அதனால் தற்போதைய சிறுபான்மை அரசும் இலங்கை மக்களும் 'எதிரி எங்களை விடவும் பலமானவன்' என்ற எண்ணத்துடனேயே தொடர்ச்சியாகச் செயற்பட வேண்டும்.


**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

**'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

வானவில்

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ **இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.**

# ஜே.வி.பி. மேற்கொள்ளும் தொடர் எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளும் அதனால் பிளவுபடும் நிலையும்!

இலங்கையில் ஏற்பட்டுள்ள தற்போதைய அரசியல் குழப்ப நிலைமைகளில் போலி இடதுசாரிகளான ஜே.வி.பியின் நடவடிக்கைகள் வழமைபோல எதிரப்புரட்சிகரமானதாகவும், சந்தர்ப்பவாதரீதியாகவும் அமைந்திருப்பதைக் காண முடிகிறது. ஜே.வி.பியிடம் இருந்து இதைத் தவிர வேறு ஒரு நிலைப்பாட்டை எதிர்பார்த்திருக்க முடியாது என்பதே உண்மை.

ஏனெனில் 2015 ஜனவரி 8இல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது, ஏகாதிபத்திய சக்திகள் தீட்டிய ஆட்சி மாற்றத்துக்கான திட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான பிற்போக்கு சக்திகளுடன் ஜே.வி.பியும் கைகோர்த்தது. முதல் கோணல் முற்றிலும் கோணல் என்பது போல, ஜே.வி.பி. அப்பொழுது எடுத்த நிலைப்பாட்டை வைத்தே தொடர்ந்து ஜே.வி.பியின் செயல்பாடுகள் எப்படி அமையப் போகின்றது என்பதை ஊகிக்க முடிந்தது.

அதன் பின்னர் ஐ.தே.க.தலைமையில் கடந்த மூன்றரை வருடங்களாக நடைபெற்று வந்த 'நல்லாட்சி' அரசாங்க காலத்தில் போலி எதிர்க்கட்சியான தமிழ் தேசியக் கூட்டமைப்பு போலவே ஜே.வி.பியும் அரசாங்கத்துக்கு முண்டு கொடுக்கும் வேலைகளிலும், உண்மையான எதிர்க்கட்சியையும், இடதுசாரிக் கட்சிகளையும் தாக்கும் வேலைகளிலுமே ஈடுபட்டு வந்தது.

இப்பொழுது மட்டுமல்ல ஜே.வி.பியின் செயல்பாடுகள் எப்பொழுதுமே ஐ.தே.க. சார்பாகவே இருந்து வந்திருக்கிறது. சிங்கள இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட ஜே.வி.பி. தனது வரலாறு முழுவதும் அந்தக் கொள்கையையே பின்பற்றி வந்திருக்கிறது.

1970 பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்த சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான ஏகாதிபத்திய விரோத அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காக உள்நாட்டு – வெளிநாட்டு சக்திகளின் தூண்டுதலுடனும், ஆதரவுடனும்




ஜே.வி.பி. அடுத்த வருடமே, அதாவது 1971 ஏப்ரலில் ஆயுதக் கிளர்ச்சி ஒன்றில் ஈடுபட்டது.

ஜே.வி.பியின் அந்தக் கிளர்ச்சிக்கு அன்றைய ஐ.தே.க. தலைமை ஆதரவளித்தது எல்லோரும் அறிந்த உண்மை. 71 கிளர்ச்சி காரணமாக முன்னைய அரசாங்கத்தால் சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஜே.வி.பி. தலைவர்களை ஐ.தே.க. அரசாங்கம் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையில் 1977இல் ஆட்சிக்கு வந்ததும் விடுதலை செய்து சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடதுசாரிக் கட்சிகளுக்கும் எதிராகப் பயன்படுத்திக் கொண்டது.

**இராசேந்திரம்**

பின்னர் இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வின் ஊடாகத் தீர்வுகாணும் நோக்குடன் 1987இல் செய்து கொள்ளப்பட்ட இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை முறியடிப்பதற்காக 1988 – 89 காலப் பகுதியில் ஜே.வி.பி. இரண்டாவது ஆயுதக் கிளர்ச்சி ஒன்றை நடத்தியது. இதில் சுமார் அறுபதினாயிரம் சிங்கள இளைஞர்களை ஐ.தே.கவின் பிரேமதாச அரசிடம் பலியிட்டது.

அதன் பின்னர் 2000ஆம் ஆண்டில் அப்போதைய சந்திரிக தலைமையிலான அரசாங்கம் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக ஏறத்தாழ சமஸ்டியை ஒத்த தீர்வுத் திட்டமொன்றை முன்வைத்தபோது, ஐ.தே.கவுடனும், புலிகளின் பினாமி அமைப்பான தமிழர் விடுதலைக் கூட்டணியுடனும், வேறு பல சிங்கள இனவாத அமைப்புகளுடனும் இணைந்து ஜே.வி.பி. அதை எதிர்த்து முறியடித்தது.

இப்பொழுது இலங்கையில் ஐ.தே.க. தலைமையிலான ஏகாதிபத்திய சார்பு தீவிர வலதுசாரி அரசாங்கத்தை ஜனாதிபதி மைத்திரி நீக்கிய போதும், நாடாளுமன்றத்தைக் கலைத்து மக்களிடமிருந்து புதிய ஆணையைக் கோரிய போதும், ஜே.வி.பி., ஐ.தே.க., தமிழ் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லீம் காங்கிரஸ், மனோ கணேசனின் 'முற்போக்கு' கூட்டணி போன்ற வலதுசாரி சக்திகளுடன் சேர்ந்து செயல்படுகிறது.

மகிந்த ராஜபக்ச தலைமையிலான புதிய அரசாங்கத்துக்கு எதிராக மட்டுமின்றி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் எதிராக 'இம்பீச்மென்ட்' என்ற குற்றவியல் பிரேரணையைக் கொண்டு வந்து அவரைப் பதவி நீக்கம் செய்யப் போவதாக ஜே.வி.பி. மிரட்டல் விடுக்கிறது. அப்படி ஒரு பிரேரணை கொண்டு வந்து நிறைவேற்றுவதானால்

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவு தேவை. வெறுமனே ஆறு உறுப்பினர்களை மட்டும் வைத்துக்கொண்டு ஜே.வி.பியால் எப்படி இதைச் சாதிக்க முடியும்? ஐ.தே.க. உட்பட பிற்போக்கு கட்சிகள் அனைத்தினதும் ஆதரவு தனது திட்டத்துக்கு கிடைக்கும் என்ற நப்பாசையிலேயே ஜே.வி.பி. இவ்வாறு மனப்பால் குடிக்கிறது.

இந்த நடவடிக்கைகள் எல்லாம் ஜே.வி.பியின் தொடர்ச்சியான எதிர்ப்புரட்சி மற்றும் சந்தர்ப்பவாத நடவடிக்கைகளைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. ஜே.விபியின் இத்தகைய நடவடிக்கைகளால் அந்த இயக்கத்திலிருந்து காலத்துக் காலம் பலர் வெளியேறி புதிய அமைப்புகளைத் தோற்றுவித்திருக்கின்றனர். அதில் குறிப்பிடக்கூடிய வகையில் அதன் பிரச்சாரச் செயலாளராக இருந்த விமல் வீரவன்ச ஜே.வி.பியில் இருந்து வெளியேறி தேசிய சுதந்திர முன்னணி என்ற அமைப்பை உருவாக்கினார். அவருடைய அமைப்புக்கும் ஜே.வி.பிக்கு இருப்பது போல அதேயளவு உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் இருக்கின்றனர். ஜே.வி.பிக்கும் ஐ.தே.கவுக்கும் இருக்கும் உறவைக் குறிப்பிடுவதற்காக ஜே.வி.பி. இயக்கத்தை “சிவப்பு யானை'' என விமல் வீரவன்ச கேலியாகக் குறிப்பிட்டு வருகின்றார்.

பின்னர் ஜே.வி.பியின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவரான குமார் குணரட்ணம் என்பவர் தலைமையில் ஒரு பிரிவினர் வெளியேறி 'முன்னிலை சோசலிசக் கட்சி' என்ற பெயரில் ஒரு கட்சியை நடாத்தி வருகின்றனர். அவர்கள் தாம் ஜே.வி.பியை விட்டு வெளியேறியதற்குச் சொன்ன காரணம், 'ஜே.வி.பி. ஒரு இடதுசாரி கட்சி அல்ல' என்பதுதான்.

அதன் பின்னர் ஜே.வி.பியின் ஸ்தாபக தலைவர் ரோகண விஜேவீரவுடன் அதன் முதலாவது மத்திய குழுவில் அங்கம் வகித்தவரும், பின்னர் நீண்டகாலமாக ஜே.வி.பியின் தலைவராக இருந்தவருமான காலஞ்சென்ற சோமவன்ச ஜே.வி.பியின் போக்கில் வெறுப்புற்று அதிலிருந்து வெளியேறி புதிய கட்சியொன்றை ஆரம்பித்தார்.

இப்பொழுது ஜே.வி.பியின் பிரச்சாரச் செயலாளராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருக்கும் விஜித ஹேரத்தும் தற்போதைய கட்சித் தலைவர் அனுரகுமார திசநாயக்கவின் தீவிர ஐ.தே.க. போக்கில் அதிருப்தி அடைந்திருப்பதாகவும், மிக விரைவில் அவர் தலைமையில் ஒரு குழுவினர் வெளியேறி புதிய அமைப்பொன்றை உருவாக்கக்கூடும் எனவும் தெரிய வருகிறது.

ஜே.வி.பியினர் மார்க்சிசம் பேசுவார்கள், தமது கூட்ட மேடைகளில் மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின் படங்களை வைப்பார்கள், சிவப்பு சட்டை அணிவார்கள், செங்கொடியை ஏந்துவார்கள், தொழிலாளர்களுக்காக தொண்டை கிழியக் கத்துவார்கள், சிறுபான்மை இனங்களுக்கு சமவுரிமை வேண்டும் எனப் பரிந்து பேசுவார்கள், ஆனால் நடைமுறையில் இவையெல்லாவற்றுக்கும் எதிராகச் செயல்படுவார்கள்.

இவ்வாறு ஜே.வி.பி. போல இரண்டக நிலையுடன் செயல்படும் இடதுசாரி அமைப்புகளை உலகில் காண்பது அரிது.

எனவே, ஜே.வி.பி. என்ன சொல்கிறது என்பதை விட, அது நடைமுறையில் என்ன செய்கிறது என்பதை அவதானிப்பதன் மூலம் அந்த இயக்கத்தால் தவறாக வழிநடத்தப்படுபவர்கள் சரியான பாதைக்கு மீண்டுவர முடியும்.

# கட்சிப் பத்திரிகையின் முக்கியத்துவம்

நம் கருத்தில் ஓர் அகில ருஷ்ய அரசியல் செய்தித்தாளை நிறுவுவதே, நம்செயலின் ஆரம்பப் புள்ளியாக, நாம் விரும்பும் அமைப்பைப் படைக்கும் முதல் நடைமுறை வேலையாக இருக்க வேண்டும். இந்தச் செய்தித்தாளே, அமைப்பை ஒரே சீராக வளர்க்கவும் செழுமைப்படுத்தவும் விரிவுபடுத்தவும் அடிப்படையம்சமாகப் பயன்படும். எல்லாவற்றிற்கும் மேலாக நமக்கு அவசியமானது ஒரு செய்தித்தாளே. அதில்லாமல் நாம் கோட்பாடு ரீதியில் முரணில்லாததும் முழுமையானதுமான பிரச்சாரத்தையும் கிளர்ச்சியையும் முறையாக நடத்த முடியாது.

பல்வேறு வட்டார இயக்கங்களை ஒரே அகில ருஷ்ய இயக்கமாக மாற்றியமைப்பதில், எடுத்துக் கொள்ள வேண்டிய முதல் நடவடிக்கை, அகில ருஷ்யச் செய்தித்தாளைத் தொடங்குவதேயாகும். கடைசியாக, நமக்கு தேவையான பத்திரிகை ஓர் அரசியல் செய்தித்தாளாகவே இருக்க வேண்டும். அரசியல் செய்தித்தாள் ஒன்று இல்லாமல், அரசியல் இயக்கம் என்று அழைக்கத் தகுதியுடைய இயக்கத்தைப் பற்றி இன்றைய ஐரோப்பாவில் சிந்திக்கவே முடியாது. அச் செய்தித்தாள் இல்லாமல், நமது கடமையை – அரசியல் அதிருப்தியையும் கண்டனத்தையும் வெளிப்படுத்தும் அம்சங்கள் அனைத்தையும் ஒன்றுசேரத் திரட்டி, அவற்றைக்கொண்டு பாட்டாளி வர்க்கத்தின் இயக்கத்தைச் செழுமைப்படுத்தும் கடமையை – நாம் நிறைவேற்ற முடியவே முடியாது. பாட்டாளி வர்க்கத்தின் வாயிலாக அந்தப் பத்திரிகை நகர்ப்புற சிறு முதலாளித்துவத்தினர், நாட்டுப்புறக் கைத் தொழிலாளர்கள், கிராம விவசாயிகள் ஆகியோரின் அணிகளில் ஊடுருவி, உண்மையிலேயே பொதுமக்களுக்குரிய அரசியல் செய்தித்தாளாகிவிடும்.

எனினும், செய்தித்தாள் ஆற்ற வேண்டிய பங்கு, கருத்துக்களைப் பரப்புவதிலும் அரசியல்அறிவைப் புகுத்துவது, அரசியல் கூட்டாளிகளை ஈர்த்துக் கொள்வது ஆகிய நடவடிக்கைகளில் மட்டும் அடங்கிவிடுவதில்லை. பத்திரிகை என்பது கூட்டுத்துவப் பிரச்சாரகனாகவும் கூட்டுத்துவக் கிளர்ச்சிக்காரனாகவும் இருப்பதோடு கூட்டுத்துவ ஒழுங்கமைப்பாளனாகவும் உள்ளது.

நம்முடைய கருத்தோட்டத்தின்படி, நம்முடைய செயல்களின் தொடக்கப்புள்ளி, நமக்குத் தேவையானதொரு ஸ்தாபனத்தை நாம் உருவாக்குவதற்கு முன்னோடியாக நாம் எடுத்து வைக்கும் முதல் அடி என்பது, அல்லது, நாம் உருவாக்கும் ஸ்தாபனத்தை வளர்த்தெடுத்து, ஆழமாக்கி, விரிவான முறையில் உறுதியாக முன்னெடுத்துச் செல்வதற்கானப் பிரதான இழையாக இருப்பதென்பது, நமக்காக ஓர் அகில ரஷ்ய அரசியல் பத்திரிகையைத் துவக்குவது என்பதேயாகும். நம் அனைவருக்கும் தேவையான ஓர் அரசியல் பத்திரிகை. அத்தகைய பத்திரிகையின்றி, பொதுவாக சமூக ஜனநாயகத்தைக் கட்டுவதற்கும், அடிப்படையாக உள்ள கொள்கை உறுதியுடன் நம்முடைய பிரச்சாரத்தை, கிளர்ச்சியை முறையுடன் முன்னெடுத்துச் செல்ல முடியாது.

**— லெனின்**

# தமிழ் மக்களின் உரிமைகளையும் மானத்தையும் விற்கும் சுமந்திரன்!

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தமிழர் அரசியலில் இதுவரை காலமும் இல்லாத சாதனைகள் பலவற்றைப் படைத்து வருகின்றார். அவருடைய சாதனைகளை எவரும் இலேசில் முறியடித்துவிடவோ பட்டியலிட்டுவிடவோ முடியாது. ஏனெனில் இந்த நிமிடம் வரையிலான அவரது சாதனைகளைப் பட்டியலிட்டு முடித்துவிட்டோம் என நினைத்தால் அவர் அடுத்த நிமிடம் மேலும் சாதனைகளை நிலைநாட்டி இருப்பார்.

2015இல் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான 'நல்லாட்சி' அரசாங்கம் பதவிக்கு வந்த நாளிலிருந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பில் உத்தியோகபூர்வமாக எவ்வித முடிவுகளையும் எடுக்காமலே இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன், மாவை சேனாதிராசா ஆகியோர் எதிர்க்கட்சி தலைவர் பதவியையும் வைத்துக் கொண்டே ரணில் அரசாங்கத்துக்கு முண்டு கொடுப்பதையே தொடர்ந்து செய்து வந்தனர். இதில் சுமந்திரனே முன்னோடியாகச் செயல்பட்டார்.

இவர்களது இந்தச் செயல்பாட்டால் சுரேஸ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எப். தமிழ் தேயக் கூட்டமைப்பை விட்டு வெளியேறியது. வட மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கூட்டமைப்புடன் முரண்படத் தொடங்கி இறுதியில் கூட்டமைப்பை விட்டு விலகி தனிக் கட்சி ஆரம்பித்துள்ளார். இவர்களது அரச ஆதரவுச் செயற்பாடு காரணமாக கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டமைப்பின் வாக்கு வங்கியில் பெரும் சரிவு ஏற்பட்டது. புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழ் மக்களும் இவர்களது செயற்பாடுகளுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளனர். அவுஸ்திரேலியாவுக்கு ஒருமுறை சுமந்திரன் போனபோது அங்குள்ள தமிழ் மக்களிடம் அடிவாங்காத குறையாக 'வரவேற்க'ப்பட்டார். இவ்வளவு எதிர்ப்புகள் வந்தபோதிலும் இந்த மூவரும் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பது என்பதில் பிடிவாதமாக இருக்கின்றனர்.

இவையெல்லாம் ஒருபக்கம் இருக்க, அண்மையில் வவுனியாவில் நடைபெற்ற




தமிழரசுக் கட்சி இளைஞரணி மாநாட்டில் பேசிய சுமந்திரன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை “நீ” என ஒருமையில் விழித்து, அவரைத் திட்டி, வசைபாடி, தனது கீழ்த்தரமான மனோபாவத்தையும், நடத்தையையும் பகிரங்கப்படுத்தியதுடன், தமிழ் மக்களின் மானத்தையும் கப்பலேற்றியிருக்கிறார்.

புனிதன்

தமிழ் மக்களை நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு கட்சியின் பிரதிநிதி நாட்டின் பிரதான நிர்வாகியான ஜனாதிபதியை இவ்வாறு கீழ்மைப்படுத்தி விழித்ததை கூட்டமைப்பின் தலைவர்களான சம்பந்தனோ, மாவை சேனாதிராசாவோ இதுவரை கண்டிக்காமல் மௌனம் காக்கின்றனர். இந்த இடத்தில்தான் சிங்கள அரசியல்வாதிகளின் பெருந்தன்மையை சுட்டிக்காட்ட வேண்டும். அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் தமது பரம வைரியைக்கூட “திரு” என்றே விழித்துப் பேசும் மரபைக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வளவுக்கும் ஜனாதிபதி மீது சுமந்திரனுக்கு வெறித்தனமான கோபம் வந்ததிற்குக் காரணம், சுமந்திரன் தரகு வேலை பார்க்கும் ரணிலின் ஐ.தே.க. அரசாங்கத்தை ஜனாதிபதி பதவி நீக்கம் செய்துவிட்டார் என்ற கண் மண் தெரியாத ஆத்திரம்தான்.

அதன் காரணமாக சுமந்திரனது பிந்திய சாதனையாக அவர் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளராக இருந்துகொண்டு ஐக்கிய தேசியக் கட்சிக்கும் பேச்சாளராக மாறியிருக்கிறார். தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் அரசியல் குழப்பத்தில் அவர் எல்லா சந்தர்ப்பங்களிலும் ஐ.தே.கவின் 'அப்புகாத்து'வாக வாய்ச்சவாடலடித்து வருகிறார்.

தமிழர் அரசியலில் பாரம்பரியமோ நீண்டகால வரலாறோ கொண்டிராத அவர், தமிழரசுக் கட்சியில் இணைந்து முதன்முதலில் தேசிய பட்டியல் உறுப்பினராக பின்கதவால் நாடாளுமன்றத்துக்குள் நுழைந்திருந்தார். அவரது நாடாளுமன்ற பிரவேசத்தைப் பலரும் கேலி செய்ததைத் தொடர்ந்து அனைவருக்கும் சவால் விடுவது போல நேரடியாகவே தேர்தலில் போட்டியிட்டு பெருமளவான வாக்குகள் பெற்று வெற்றியீட்டினார். ஆனால் 2015 ஓகஸ்ட் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டும்வரை அவரது சுயரூபத்தை மக்கள் அறிந்திருக்கவில்லை.

சுமந்திரனின் ஆட்டங்களுக்கெல்லாம் அனுசரணையாக இருப்பது திரிகோணமலையில் பாரம்பரியமான ஐ.தே.க. குடும்பத்தில் இருந்து வந்து சந்தர்ப்ப சூழ்நிலையால் தமிழரசுக் கட்சித் தலைவராகவும், தமிழ் தேசியக் கூட்டமைப்பு தலைவராகவும் இருக்கும் இராஜவரோதயம் சம்பந்தன்தான். சம்பந்தன் விடயத்திலும் ஒரு குழப்பம் உண்டு. தமிழரசுக் கட்சியினர் தமது கட்சியின் பெயரை ஆங்கிலத்தில் சமஸ்டிக் கட்சி (Federal Party) என்றும், தமிழில் தமிழரசுக் கட்சி என்றும் பித்தலாட்டம் செய்தது போல, தமிழரசுக் கட்சியின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவரும், திரிகோணமலை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவருமான

**தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க...**

# யார் இந்த சிவில் சமூகம்?




இலங்கையில் ஏதாவது நல்ல விடயங்கள் நடக்கும் போதெல்லாம் அதை சில அரசியல்வாதிகள் மட்டும் எதிர்ப்பதில்லை. மதவாதிகளும் எதிர்ப்பார்கள். இந்த மதவாதிகள் அநேகமாக உள்ளூர் தயாரிப்பாகவே இருப்பார்கள். இவர்களது கவலை எல்லாம் தங்களது மதம், மொழி, கலாச்சாரம் எல்லாம் பறிபோகிறது என்பதாகத்தான் இருக்கும். தமது நாட்டின் வளங்களை ஆட்சியில் இருப்பவர்கள் அந்நிய நாடுகளுக்குத் தாரை வார்ப்பதையோ, அந்நிய கலாச்சார ஊடுருவல் நடப்பதையோ இவர்கள் பார்க்கமாட்டார்கள். இவர்கள் தமது எதிரிகளை எப்பொழுதும் சக இனத்தவரிடையிலேயே தேடிக் கொண்டிருப்பார்கள்.

இவர்களைத் தவிர கடந்த சில தசாப்தங்களாக இன்னொரு தரப்பினரும் ஏதாவது நல்ல விடயங்கள் நடந்தால் அதை நாகரீகமான முறையில் எதிர்ப்பதற்கெனறு உருவாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தம்மை "சிவில் சமூகம்" (Civil Society) என பெருந்தன்மையோடு அழைத்துக் கொள்வார்கள். இவர்களில் கொஞ்சம் கீழ்மட்டத்தவர்கள் தங்களை "பிரஜைகள் குழு" (Citizens Committee) என்று அழைப்பதுமுண்டு.

இந்த சிவில் சமூகம் இப்பொழுது சற்று விரிவாக்கம் பெற்று "சிவில் மற்றும் கல்விசார் சமூகம்" (Civil and Academic Society) என்று தனது பெயரைச் சூடிக் கொண்டிருக்கிறது.

இந்தப் பேர்வழிகளைப் பற்றி ஆராய்ந்து பார்த்தால் பெரும்பாலோர் அநாமதேயங்களாகவும் சமூகத்துடன் எவ்வித தொடர்புகளும் அற்றவர்களாகவும் இருப்பார்கள். ஆனால் இவர்களது பெயருக்கு ஒரு கனதியைக் கொடுப்பதற்காக பெயருக்கு முன்னால் "கலாநிதி" (Dr) என்றோ அல்லது மதப் பெரியார் என்பதைக் குறிக்கும் அடைமொழியோ இருக்கும். இவர்களில் சிலர் ஆங்கில ஊடகங்களில் அவ்வப்போது கடினமான சொற்களைப் பயன்படுத்தி விளங்க முடியாத கட்டுரைகளையும் எழுதுவார்கள்.

அதுதவிர, சிலர் ஏதாவது வெளிநாட்டுத் தொடர்புடன் அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றை ஆரம்பித்து, சிலரை வேலைக்கமர்த்தி, சமூக பொருளாதார கலாச்சார ஆய்வுகளையும் மேற்கொள்வார்கள். இந்த ஆய்வுகள் எதற்காக மேற்கொள்ளப்படுகின்றன என்ற கேள்விக்கு தெளிவான பதில் இருக்காது. ஆனால் இந்த ஆய்வுகளில் பெறப்படும் தரவுகளை இலங்கை அரசாங்கமோ அல்லது இலங்கையில் ஆக்கபூர்வமான செயல்பாடுகளைச் செய்பவர்களோ பயன்படுத்துவதாகத் தெரியவில்லை.

**புரத்தான்**

ஆனால் இந்த ஆய்வுகளை பல நோக்கங்களுடன் செயல்படும் சர்வதேச நிறுவனங்கள் பல்வேறு நாடுகளில் மேற்கொள்ளும் தமது வேலைகளுக்கு உதவியாகப் பயன்படுத்திக் கொள்கின்றன. சில நாடுகளில் அரசாங்கங்களை வீழ்த்துவதற்கும் நிறுவுவதற்கும் கூட இந்த ஆய்வுகள் பயன்பட்டிருக்கின்றன.

அண்மையில் இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்ப நிலைகளின் போது சில சிவில் சமூக அமைப்புகள் தலைகாட்டியிருக்கின்றன. இவர்களது தலைகாட்டல் ஒரு சீர்வரிசையில் அமைந்திருக்கின்றன.

அந்த வரிசையில் பதவி நீக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி, அதனுடைய கூட்டாளிக் கட்சிகள், அவைக்குச் சார்பான பொது அமைப்புகள், மேற்கத்தைய நாடுகள் என்பனவற்றுடன் இந்த சிவில் சமூகமும் சேர்ந்துள்ளது. இவர்களுடைய பிரதான கோசங்களாக அரசியல் அமைப்பு மீறப்பட்டுள்ளது, ஜனநாயகம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுள்ளது, மீண்டும் எதேச்சாதிகார ஆட்சி நிறுவப்பட்டுள்ளது என்பன இருக்கின்றன.

இந்த பொது அமைப்புகளில் சில 1978இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தன நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையைக் கொண்ட இன்று நடைமுறையில் உள்ள எதேச்சாதிகார அரசியல் அமைப்பைக் கொண்டு வந்தபோது அதற்கெதிராக போர்க்கொடி தூக்கியவை. இப்பொழுது அந்த அரசியல் அமைப்பு மீறப்பட்டுள்ளது என அந்த அரசியல் அமைப்பை ஜனநாயக ரீதியானது எனக்காட்ட முயல்கின்றனர்.

அதுமட்டுமின்றி, தற்போதைய ஆட்சிக் கலைப்பை அரசியல் சாசனத்தையும் ஜனநாயகத்தையும் மீறிய செயல் என கூப்பாடு போடுபவர்கள், 2015 ஜனவரி 8இல் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியானதும், 162 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் பிரதமர் தி.மு.ஜெயரத்ன தலைமையில் ஆட்சியில் இருந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தை நீக்கிவிட்டு, வெறுமனே 47 உறுப்பினர்களுடன் இருந்த ஐ.தே.கட்சி தலைவரான ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்கியதையோ அல்லது பிரதம நீதியரசர் மொகான்

பீரிசை நாடாளுமன்றத்தில் தீர்மானம் எதுவும் நிறைவேற்றாமல் பதவி நீக்கியதையோ அல்லது உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை நடத்தாமல் மூன்றாண்டுகள் இழுத்தடித்ததையோ அல்லது மாகாண சபைகளுக்குத் தேர்தல் நடத்தாமல் இருப்பதையோ, ஏன் அரசியல் சாசனத்தையும் ஜனநாயகத்தையும் மீறிய செயலாக இவர்களால் பார்க்க முடியவில்லை. இந்த இடத்தில் இவர்களது பக்கச்சார்பற்ற நிலை எங்கே ஓடி ஒளிந்து கொண்டுள்ளது?

அத்துடன் ரணில் விக்கிரமசிங்கவைப் பதவி நீக்கம் செய்ததைக் கண்டித்து சிவில் சமூகம் சார்பில் கையெழுத்திட்ட இந்தப் பெருந்தகைகளின் கடந்தகால வரலாறு, அரசியல் பின்னணி என்பனவற்றையும் ஆராய்ந்து பார்த்தால் மேலும் பல விடயங்களை அறிந்து கொள்ளலாம்.

இந்த கையெழுத்துப் பட்டியலில் சில தமிழ்ப் பெயர்களும் இருக்கின்றன. அவர்களின் கடந்தகால வரலாறும் சில உண்மைகளைக் கூறும். அதில் சிலர் தமிழ் மக்கள் 30 வருடப் போரில் அல்லலுற்றபோது வெளிநாடுகளில் சுகபோகமாக வாழ்ந்தவர்கள், சிலர் வெளிநாட்டுப் பணத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களை நடத்தியவர்கள். சிலர் புலம்பெயர் நாடுகளில் புலிகளின் பினாமிகளாகச் செயற்பட்டவர்கள்.

இவர்களில் சிலர் 2009இல் போர் முடிவுற்றதும் பல்வேறு வேலைத்திட்டங்களுடனும் பணபலத்துடனும் இலங்கையில் குடியேறியவர்கள். அதுவரை ஆள்பாதி ஆடைபாதியாக இருந்தவர்கள் 2015இல் இலங்கையில் ரணில் தலைமையில் ஒரு வலதுசாரி அரசு அமைந்ததும் இனிமேல் இலங்கைதான் தமது சொர்க்கம் என நினைத்து புதிதாக வீடு மனைகளைக் கட்டி வாழ ஆரம்பித்தவர்கள்.

அவர்களில் சிலர் மக்களைத் திசைதிருப்புவதற்காக இடதுசாரி வேடங்களில் செயற்படுகின்றனர். உதாரணமாக, கடந்த பெப்ருவரியில் நடந்த உள்ளூராட்சித் தேர்தலின் போது பிற்போக்கான தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்றான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வெற்றியைத் தடுப்பதற்காக "சுயேட்சைக் குழுக்கள்" என்ற பெயரில் சில குழுக்களை உருவாக்கி அவற்றைத் தேர்தலில் போட்டியிட வைத்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வெற்றி வாய்ப்பை உறுதிப்படுத்தியவர்கள். எனவே பேசும் வார்த்தைகளை விட இவர்களது செய்கைகளை அவதானித்தால் இப்படியானவர்களின் நோக்கங்களை இனங்காண முடியும்.

ஆனால் இந்த "சிவில் சமூகம்" என்னதான் பிரயத்தனங்களில் ஈடுபட்டாலும் மக்கள்தான் வரலாற்றைத் தீர்மானிக்கப் போகின்ற சக்திகள். கண்ணுக்குத் தெரியாத நூல்களால் இயக்கப்படுகின்ற இந்த 'நண்பர்களை' விட கண்ணுக்கு தெரிந்த எதிரியையும் நம்பலாம் என்பதில் மக்களுக்கு அனுபவம் உண்டு.

---

**5ம் பக்கத்தொடர்ச்சி....**

இராஜவரோதயம் அவர்களின் புதல்வர்தான் இந்த சம்பந்தன் என்று சிலர் புலூடா கதையும் விட்டு வைத்திருக்கின்றனர். அது உண்மையல்ல. தமிழரசுக் கட்சி இராஜவரோதயத்தின் மகன் அல்ல இந்த சம்பந்தன். இவர் ஐ.தே.க. இராஜவரோதயத்தின் மகன். அதனால்தான் தமிழரசுக் கட்சியின் உத்தியோகபூர்வ தலைவராக வெளியில் காட்டிக் கொண்டாலும் மனதை ஐ.தே.கவிடம்தான் ஈடு வைத்திருக்கிறார்.

இத்தகையதொரு சூழலில்தான் மாவை சேனாதிராசாவின் கையாலாகாத்தனம் காரணமாக சம்பந்தனுக்குப் பிறகு தமிழரசுக் கட்சியின் தலைவர் தான்தான் என்ற தற்துணிபை சுமந்திரன் கொண்டிருக்கிறார்.

தமிழ் தலைமைகளின் தொடர் பாரம்பரியமான ஐ.தே.க. விசுவாசம் காரணமாகவும், சம்பந்தனின் விசேடமான ஐ.தே.க. பற்றுதல் காரணமாகவும், 2015 ஜனவரி 8இல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலிலும் அதன் பின் ஓகஸ்டில் நடந்த பொதுத் தேர்தலிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஐ.தே.க. அணியை எந்தவித நிபந்தனையும் இல்லாமல் பகிரங்கமாக ஆதரித்தது.

ரணில் தலைமையிலான அரசாங்கம் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மட்டுமின்றி தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் ஒன்றைத்தன்னும் நிறைவேற்றாத போதிலும், தமிழ் தேசியக் கூட்டமைப்பு ரணில் அரசாங்கத்தை கண்ணை மூடிக்கொண்டு தொடர்ந்து ஆதரித்தே வந்துள்ளது. இந்த ஆதரவின் பின்னணியில் சுமந்திரனுக்கு பெரும் பங்கு உண்டு.

சுமந்திரன் வெளிநாட்டு சக்திகளினதும் ஐ.தே.கவினதும் பிரதிநிதியாகவே தமிழரசுக் கட்சிக்குள் நுழைந்தார் என்ற குற்றச்சாட்டு பரவலாக உண்டு. அதை நிரூபிப்பதைப் போலத்தான் சுமந்திரனின் நடவடிக்கைகளும் அமைந்திருக்கின்றன.

பொதுவாகவே இலங்கை சுதந்திரமடைந்த காலம் தொடக்கம் எல்லாத் தமிழ் தலைவர்களுமே, சி.சுந்தரலிங்கம், ஜீ.ஜீ.பொன்னம்பலம், எஸ்.ஜே.வி. செல்வநாயகம், அ.அமிர்தலிங்கம் என எல்லோருமே ஐ.தே.க. சார்பாகவும், ஏகாதிபத்திய சார்பாகவுமே செயற்பட்டு வந்திருக்கிறார்கள். ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட வே.பிரபாகரனும் அந்தப் பாதையிலேயே பயணித்தார். இவர்கள் எல்லோரையும் விட இன்றைய தமிழ் தலைமையை அலங்கரிக்கும் சம்பந்தன், சுமந்திரன், மாவை சேனாதிராசா ஆகியோரே தமிழர் வரலாற்றில் மிகவும் மோசமான கடைகோடி பிற்போக்குவாதிகளாகவும், தமிழ் மக்களின் உரிமைகளை சொந்த இலாபங்களுக்காக விலைபேசி விற்பவர்களாகவும் இருக்கிறார்கள்.

இவர்களுடைய இந்த மக்கள் விரோத தான்தோன்றிப் போக்குகளுக்கெல்லாம் காரணம், தாம் என்ன செய்தாலும் தமிழ் மக்கள் செம்மறியாட்டுக் கூட்டம் போல தொடர்ந்து பழைய பாதையிலேயே சென்று தமக்கு வாக்குப் போட்டு நாடாளுமன்றம் அனுப்புவார்கள் என்ற அசையாத நம்பிக்கைதான்.

ஆனால் மக்களும் காலமும் எப்பொழுதும் ஒரே பாதையில், ஒரே போக்கில் செல்வதில்லை. எல்லாவற்றுக்கும் ஒரு தொடக்கமும் முடிவும் உண்டு என்பது இயற்கையின் நியதி. அந்த வகையில் 2015இல் இலங்கை மக்கள் விட்ட தவறை அடுத்த தேர்தலில் திருத்துவதற்கான சந்தர்ப்பத்தை பெரும்பான்மை சிங்கள மக்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். அந்த எதிர்பார்ப்பில் தமிழ் மக்களும் இணைந்து கொண்டு தங்கள் தலைவிதியையும் மாற்றியமைப்பார்கள் என்ற எதிர்பார்ப்பு பலருக்கும் இருக்கிறது. அதற்கான சமிக்ஞையை கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் காட்டியும் இருக்கிறார்கள்.

முக்கியமாக தமிழர்களின் உரிமைகளை விலைபேசி விற்றவர்களான சம்பந்தன், சுமந்திரன், மாவை சேனாதிராசா ஆகியோரை தமிழர்களின் அரசியல் தலைமைப் பொறுப்பிலிருந்து நீக்கும் நடவடிக்கையை அடுத்த பொதுத் தேர்தலின் போது தமிழ் மக்கள் தமது தலையாய கடமையாக மேற்கொள்ள வேண்டும்.

# வட கொரியாவில் ஒன்பது நாட்கள்



**அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு மேற்குலகில் தொடர்ச்சியாக தூற்றப்பட்டும் பயங்கரவாத நாடாகச் சித்தரிக்கப்பட்டும் வந்துள்ளது. அந்த நாடு முழுவதுமாக அழித்தொழிக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பினால் அச்சுறுத்தலும் விடுக்கப்பட்டது. ஆனால் Jay Tharappel என்பவரால் எழுதப்பட்டு, அவுஸ்திரேலியாவிலுள்ள சிட்னி பல்கலைக்கழக மாணவர் வாரச் செய்தித்தாளான Honi Soit (honisoit.com) இல் முதன்முதலில் வெளியிடப்பட்ட இக்கட்டுரை "ஒதுக்கப்பட்ட ராஜ்யம்" (hermit kingdom) எனக் கூறப்படும் இந்த நாட்டில் உண்மையாக வாழும் மக்கள் பற்றி மிகவும் வேறுபாடான கண்ணோட்டத்தைத் தெரிவிக்கிறது.**

யூலை 24ஆம் திகதி USyd இல் உள்ள அரசியல் பொருளாதார விரிவுரையாளர் Dr.Tim Anderson உட்பட மற்றும் ஐவர் கொண்ட பயணக்குழுவுடன் நான் பியோங்யாங் வந்து சேர்ந்தேன். நாம் விமானத்திலிருந்து இறங்கும்போது, முன்பு அவுஸ்திரேலியாவில் சிரியாவின் தூதுவராக இருந்தவரும், தற்போது கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசுக்கான சிரியத் தூதுவராகக் கடமையாற்றுவருமான Tammam Suleiman எம்மை வரவேற்றார்.

கீழே சொல்லப்போகும் விடயங்கள் அந்த நாட்டில் ஒவ்வொரு விடயமாக கல்வியியல் (Academic) அடிப்படையில் ஆராயப்பட்டவை அல்ல என்ற போதிலும், நான் சாதாரணமாகக் கண்டனவற்றையே கூறுகின்றேன்.

பெரும்பாலான வெளிநாட்டவர்கள் Koryo Tours மூலமாக அங்கே கொண்டு செல்லப்பட்டு அந்த நாட்டின் சிறந்த விடயங்களே காண்பிக்கப்படும். ஆனால் நாம் வெளிநாடுகளுடன் கலாச்சாரத் தொடர்புகளுக்கான கொரிய மக்கள் குடியரசின் அமைப்பின் மூலம் சென்றதால், எளிய விவசாய மக்களின் இல்லங்கள், பல்வகை அங்காடிக் கடைகள் (Department Stores), கொரிய குழந்தைகளுக்கு வழங்கப்படும் கல்வி வசதிகள் என அங்குள்ள நாளாந்த வாழ்க்கையின் கூடுதலான விடயங்களைப் பார்க்க முடிந்தது.

இந்த முக்கியமான விடயங்களைப் பார்ப்பதற்கு எமக்கு வழிகாட்டியாகவும் மொழிபெயர்ப்பாளராகவும் கடமையாற்றிய திரு. Kim Jong – nam எம்மிடம் கூறும்போது, "உங்களை நான் சுற்றுலாப் பயணிகளாகக் கருதவில்லை, மாறாக கலாச்சாரப் பரிமாற்றக் குழுவாகவே கருதுகின்றேன்" என்று கூறினார். நாம் எந்த வகையிலும் ஒருபோதும் கட்டுப்படுத்தப்படவில்லை என உணர்வதற்கு இது நியாயமான காரணமாக இருந்தது. எங்களுக்கு இருந்த ஒரேயொரு மட்டுப்படுத்தல் என்னவென்றால் எங்களில் ஒருவருக்காவது கொரிய மொழி தெரியாது என்பதுதான்.

*ஜேய் தரப்பேல்* **(Jay Tharappel)**

கடந்த வருடம் யூன் மாதத்தில் Fox News இல் வந்த ஒரு கட்டுரையில், வட கொரியா "சுற்றுலாப் பயணிகளை ஹோட்டலை விட்டு பாதுகாப்பில்லாமல் வெளியே செல்ல அனுமதிப்பதில்லை என்றும், யாரையாவது சந்திப்பதென்றால் விடுதி (ஹோட்டல்) எல்லைக்குள்ளேயே தான் அவர்களைச் சந்திக்க முடியும்" என்றும் எழுதப்பட்டிருந்தது. எனது அனுபவம் இதுவல்ல. நாங்கள் மூன்று மாலைப்பொழுதுகள் எங்கள் கொரிய வழிகாட்டிகள் இன்றியே தூரச் சென்றோம், எங்களது சொந்த விடயங்களைக் கவனித்தோம், நேரம் பிந்தியே விடுதிக்குத் திரும்பினோம், காலையில் எமது இரு கொரிய வழிகாட்டிகளுக்கும் வணக்கம் சொல்லும்போது கூட சிறிது போதையிலேயே இருந்தோம். அந்த இரவுகளில் நாம் சாதாரணமாக Arak மற்றும் Soju போன்ற மதுபானங்களை அருந்தி, Shisha புகைத்தது மட்டுமின்றி, கொரிய ஜனநாயகக் குடியரசில் நீண்ட காலம் வாழ்ந்து வருபவர்களும், Tammam இன் நல்ல நண்பர்களுமான ஐ.நா. வதிவிட இணைப்பாளர் Tapan Mishra, கியூபாவின் தூதரகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் Jesus Fernandez ஆகியோரைச் சந்தித்தும் உரையாடினோம்.

ஒரு வியாழக்கிழமை காலை 42 வயது நிரம்பியவரும், தொடர்ந்து புகை பிடிப்பவரும், கொரிய மக்கள் இராணுவத்தில் பணியாற்றுபவருமான எமது வழிகாட்டி திரு.Kim எம்மைத் துயிலெழுப்பி டசின் கணக்கான மீனவர்கள் மீன்பிடிக்கும் இறங்குதுறைக்கு அருகில் சூரியோதயத்தைப் பார்ப்பதற்காக அழைத்துச் சென்றார். நாங்கள் யப்பானை நோக்கியபடி இருந்த கிழக்குக் கரையான Wonsan என்ற இடத்தில் இருந்தோம். நாம் அங்குள்ள சமூக வாழ்க்கையைப் பற்றி உரையாடினோம். அப்பொழுது திரு.Kim கூறிய தகவலின்படி, அங்கு காரியாலயத்தில் பணிபுரியும் ஊழியர்களை விட நிலக்கரிச் சுரங்கங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அதிகமான ஊதியம் வழங்கப்படுவதாகவும், அதேபோன்ற

கடுமையான உடல் உழைப்பில் ஈடுபடுபவர்களுக்கு கூடுதலான கிடைப்பதாகவும் நிவாரணம் தெரிய வந்தது. பின்னர் Tammam எம்மிடம் கூறும்போது, அங்குள்ள ஒரு ஆடம்பர கொரிய BBQ உணவகத்தில் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் குறைக்கப்பட்ட கட்டணத்தில் உணவருந்துவதாகச் சொன்னார். கொரிய ஜனநாயகக் குடியரசு அரசியல் சாசனத்தின் 30ஆவது அத்தியாயத்தின்படி, “செயற்கரிய தொழிலை”ப் புரிவோர் குறைந்தளவு வேலை நாட்கள் வேலை செய்வதற்குத் தகுதியானவர்கள்.

வட கொரியாவில் உள்ள ‘உயரடுக்கினர்’ (elite) என்பவர்கள் முதலாளித்துவ சமூகங்களில் காணப்படும் உயரடுக்கினர்களை விட வித்தியாசமானவர்கள். பாடசாலை ஆசிரியர்கள், விஞ்ஞானிகள், கட்டிட வடிவமைப்பாளர்கள், வைத்தியர்கள், பொறியாளர்கள் போன்ற இந்தப் பிரிவினர் பொருளாதாரத்தில் சுயசார்பை அடைவதற்கான அரசின் முயற்சிக்கு தமது மூளைச் சேவையை வழங்குபவர்களாக உள்ளனர். இத்தகையோருக்கு கூடுதலான சம்பளம் வழங்கப்படுகின்றதா? ஆம், ஆனால் இந்த சம்பள சமத்துவமின்மை முதலாளித்துவ உலகில் நீங்கள் காண்பது போன்றதல்லை.

Wonson என்ற இடத்தில் நாம் விஜயம் செய்த சப்பாத்துத் தொழிற்சாலையில் உற்பத்தித்துறையில் ஈடுபட்டுள்ள உடல் உழைப்பாளர்களின் பகுதியில் குளிர்சாதன வசதி உள்ள அதேநேரத்தில் மேசைகளில் இருந்து வடிவமைப்பு வேலைகளில் ஈடுபட்டவர்களின் பகுதியில் அவ்வசதி காணப்படவில்லை. நாம் விஜயம் மேற்கொண்ட ஒரு உணவு பதனிடும் தொழிற்சாலையில் தொழிலாளர்கள் வேலை முடிந்த பின்னர் சென்று குளிப்பதற்காக மாடியில் நீச்சல் தடாகம் இருப்பதைக் கண்டோம். அத்துடன் நகர்ப்புற வீடமைப்பு என்பது ஒரு வர்த்தகப் பண்டமல்லாமல் நிருவாகம் சம்பந்தப்பட்ட விடயமாக இருப்பதால், நகரின் பல்வேறு பகுதிகளில் இருந்து வேறு பகுதிகளுக்கு நகருபவர்கள் சில பத்திரங்களை நிரப்புவதன் மூலம் வேலை சுலபமாக முடிந்துவிடுகிறது. குழந்தை உள்ளவர்களுக்கு மேலதிக அறை ஒன்று தேவையா? விண்ணப்பித்ததும் அடுக்குமாடியொன்றைப் பெற்றுத் தருவார்கள்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் United Press International தெரிவித்ததின்படி, வட கொரியாவிலிருந்து தப்பி வெளியேறிய Kim Ryon – hui என்பவள் தென் கொரிய தலைநகர் சியோலில் வீடற்றவர்களைக் கண்டு தான் ஆச்சரியப்பட்டதாகவும், ஆனால் வட கொரியத் தலைநகர் பியோங்யாங்கில் தான் இப்படியான காட்சியை ஒருபோதும் காணவில்லையென்றும் பகிரங்கமாகக் கூறினாள். இது நாட்டை விட்டு வெளியேறியவர்கள் தெரிவிக்கும் கூற்று மட்டுமல்ல, எனது சொந்த அனுபவத்துக்கும் பொருந்துகின்றது. நான் கூட வீடில்லாத எவரையும் அங்கு காணவில்லை என்பதுடன், இந்த நாடு வாழ்வதற்கு மிகவும் பாதுகாப்பான நாடு என அங்குள்ள தூதரகங்களில் பணிபுரிபவர்கள் திட்டவட்டமாகக் கூறுவதையும் கேட்டேன்.

நாங்கள் Sariwon நகருக்கு அருகிலுள்ள Mikok என்ற கூட்டுறவுப் பண்ணைக்கு சென்றபோது அங்கு சில பண்ணை வேலைகளைச் செய்யத் திட்டமிட்டிருந்த போதிலும், அங்குள்ள விவசாயிகள் நாங்கள் அதைச் செய்வதை விரும்பவில்லையென்றும், தாமே அதைச் செய்வதாகவும் எங்கள் வழிகாட்டிகளிடம் கூறினர். அதற்குப் பதிலாக ஒரு விவசாயக் குடும்பத்துக்கு அழைத்துச் சென்று அங்கு 60 வயது மதிக்கத்தக்க ஒரு பெண்ணிடம் பேச வைத்தபோது, அவர் சோவியத் யூனியனின் வீழ்ச்சியைத் தொடர்ந்து 1990களில் ஏற்பட்ட ‘செயற்கரிய பயணம்’ (Arduous March) பற்றி நினைவு கூர்ந்தார். அந்தக் காலகட்டத்தை மிகவும் கடுமையான காலம் என நினைவு கூர்ந்த அந்தப் பெண், இருப்பினும் இது ஒரு தற்காலிகமாக ஏற்பட்ட கஸ்டம் என்றும், இதைச் சீர்செய்வதற்கு நாட்டின் தலைமை ஒரு திட்டத்தை வைத்திருக்கும் என்று தாம் நம்பியதாகவும் கூறினார். அந்தக் காலகட்டத்து அவரது அனுபவங்கள் அவர்களது சமூகம் குறிப்பிட்ட அளவுகளில் பரந்துபட்ட பங்குபற்றலுடன் கூடிய நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட ஒன்று என்ற அபிப்பிராயத்தை எமக்கு ஏற்படுத்தியது. விவசாயிகள் தமது நிலத்துடன் மட்டும் நின்றுவிடாது, நேரத்தைச் செலவழித்து முழுக்க முழுக்க அரசால் வழங்கப்படும் விவசாயவியல் (Agronomy) பற்றியும் படிப்பதற்கு ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

“குழந்தைகளே நாட்டின் ஆட்சியாளர்கள்” என்ற வாக்கியமே வட கொரியாவின் பிரபல்யமான அரசியல் சுலோகமாக இருக்கின்றது. அதற்குக் காரணம் தமது இளைஞர்களைப் பயிற்றுவிப்பதற்கு அரசாங்கம் பெருந்தொகையைச் செலவிடுகின்றது. Wonson நகரில் ஒரு அநாதைப் பிள்ளைகளுக்கான பாடசாலைக்குச் சென்றபோது, எனது ஆரம்ப பாடசாலை நாட்களில் கிடைத்திருக்காத வகையில் அவர்களுக்கு நீச்சல் தடாகம், முழு அளவிலான விளையாட்டு வசதிகள் என்பன செய்து கொடுத்திருப்பதைக் கண்டேன். அத்துடன் அந்த நாட்டின் ஒவ்வொரு மாகாணத்திலும் ‘குழந்தைகள் மாளிகை’ (Children Palace) உருவாக்கப்பட்டு, அவர்கள் விரும்பினால் அங்கு சென்று ஓவியம், பாட்டுப் பாடுதல், நாடகம், நாட்டியம், விளையாட்டு, இசை மற்றும் நுண்கலைகள் என்பனவற்றில் தமது திறமைகளை வளர்த்துக் கொள்ளலாம். வட கொரியா மீதான பொருளாதாரத் தடைகள் நீக்கப்படுமாக இருந்தால், அந்த நாடு பொருளாதாரத்தில் சிகரத்தைத் தொடும் என Tapan என்னிடம் கூறினார்.

ஒரு நாடு யுத்தத்துக்கு முகம் கொடுத்துக் கொண்டிருப்பதே அங்கு ஒரு அதிகாரத்துவம் கட்டாயமாக நடைமுறையில் இருப்பதற்கான சாதாரண காரணம். அவ்வாறில்லாவிட்டால் அந்த நாடு அமெரிக்காவுக்கு எதிராக நின்றுபிடிக்க முடியாது. அப்படியில்லாமல் அதன் மக்கள் கோழையானவர்களாகவும், தோற்கடிக்கப்பட்டவர்களாகவும், நம்பிக்கையிழந்தவர்களாகவும் இருப்பார்களானால் அவர்களால் ஒரு மேலாதிக்க சக்திக்கு எதிராக நின்றுபிடிக்க முடியாது. அத்தகைய மேலாதிக்க சக்தி தமது தந்தையர் நாட்டின் விடுதலைப் போராட்டத்தின் போது நாட்டின் சனத்தொகையில் மூன்றிலொரு பங்கினரைக் கொலை செய்து, முழு நாட்டையும் தரைமட்டமாக்கி, இன்றும் தமது நாட்டை ஆக்கிரமித்து வைத்திருப்பதாகவே கொரிய மக்கள்

**தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க...**

# சாதிவெறி பிற்போக்குவாதி சி.சுந்தரலிங்கத்துக்கு வவுனியாவில் சிலை வைப்பது நியாயமா?



**வ**வுனியா தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், அவரால் அந்தக் காலகட்டத்தில் தொடங்கப்பட்ட 'அடங்காத் தமிழர் முன்னணி'யின் தலைவருமான சி.சுந்தரலிங்கம் அவர்களின் உருவச் சிலை ஒன்றை வவுனியா நகரில் நிறுவுவது குறித்து வவுனியா நகர சபையின் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இறந்துபோன மனிதர்களுக்கு சிலை வைப்பது என்பது தமிழர்களுக்கு ஒரு புதுமையான விடயமல்ல. இலங்கையில் இப்படியான ஒரு நிலை அவ்வளவாக இல்லாவிட்டாலும், தமிழகத்தில் முழத்துக்கு முழம் இவ்வாறான சிலைகளைக் காணலாம். ஒருவருக்கு சிலை வைப்பதானால் அவர் என்றைக்கும் நினைவுகூருமுகமாக சமூகத்துக்காக சில செயல்களைப் புரிந்திருக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்திலும் கூட மகாகவி சுப்பிரமணிய பாரதியார், திருவள்ளுவர், அவ்வையார், சங்கிலி மன்னன், ஆறுமுக நாவலர், லோங் அடிகளார், காந்தி, அல்பிரட் துரையப்பா போன்ற சிலருக்கு சிலை வைக்கப்பட்டிருக்கிறது. இவர்களில் சிலர் பற்றிய விமர்சனங்கள் இருப்பினும் இவர்கள் எல்லோரும் சமூகத்துக்காக சில செயல்களைப் புரிந்திருக்கிறார்கள் என்பதை மறுக்க முடியாது.

ஆனால் இந்த வரிசையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சுந்தரலிங்கம் சமூகத்துக்கு என்ன செய்தார் என்பதை சற்று ஆராய்ந்து பார்ப்பது அவசியம். 'அவர் அடங்காத் தமிழர் முன்னணி அமைத்து சிங்களவரை எதிர்த்தவர்' என்று சிலர் சொல்லக்கூடும். சிங்களவரை எதிர்ப்பது சரியா பிழையா என்பது ஒருபுறமிருக்க, இவர் மட்டுமா சிங்களவரை எதிர்த்தார்? எத்தனையோ பேர் எதிர்த்தார்களே? பிரபாகரன் ஆயுதம் தாங்கி எதிர்த்தாரே? இவர்கள் எல்லோருக்கும் சிலை வைக்க முடியுமா?

சரி, சிங்களவரை எதிர்த்தார் என்பதை ஒப்புக்கு ஏற்றுக் கொண்டாலும், அப்படியானவர் எதற்காக சுதந்திர இலங்கையின் முதலாவது அரசாங்கம் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக டி.எஸ்.சேனநாயக்க தலைமையில் அமைந்தபொழுது அதில் அமைச்சுப் பதவி ஏற்றிருந்தார். அதுவும் அந்த அரசாங்கம் தானே இலங்கையில் தமிழர்களின் பாரம்பரிய வாழ்விடங்களில் முதன்முதலாக திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை ஆரம்பித்து வைத்தது. அது மட்டுமல்ல, மலையகத் தமிழ் மக்களின் பிராஜாவுரிமையையும் வாக்குரிமையையும் அந்த அரசாங்கம் தானே பறித்தது. அப்பொழுது இந்த அடங்காத் தமிழன் ஏன் அடங்கிப்போனான்?

***சிவசோதி***

அதுமட்டுமல்ல, முதலாவது பொதுத் தேர்தலில் ஐ.தே.கவுக்கு போதிய பெரும்பான்மை இல்லாத சூழலில், அத்தேர்தலில் இரண்டாவதாக அதிக இடங்களைக் கைப்பற்றிய இடதுசாரிகள் சுதந்திர இலங்கையின் முதலாவது அரசாங்கத்தை அமைக்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டு, நிசங்கவின் வீட்டில் கூடி ஆராய்ந்த பொழுது, அதில் பங்குபற்றிய சி.சுந்தரலிங்கம் அங்கு பேசப்பட்டவற்றை உளவறிந்து சென்று டி.எஸ். சேனநாயக்கவிடம் கூறி, இடதுசாரிகள் தலைமையில் அரசாங்கம் அமையவிடாமல் தடுத்த பெருமைக்கும் உரியவர். அதற்குப் பிரதியுபகாரமாகவே இவருக்கு டி.எஸ். தனது அமைச்சரவையில் மந்திரிப் பதவி வழங்கி தனது நன்றிக்கடனைத் தீர்த்துக் கொண்டார்.

டி.எஸ். தலைமையில் ஐ.தே.க. தலைமையிலான சிறுபான்மை அரசு அமைவதற்கு சுந்தரலிங்கம் மட்டுமின்றி, ஜீ.ஜீ. பொன்னம்பலம் (எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அடங்கலாக) தலைமையிலான தமிழ் காங்கிரஸ் கட்சியுமே துணைபோய் வரலாற்றுத் துரோகம் இழைத்தனர் என்பதை இன்று தமிழ் தலைமைகளும்,

வரலாற்றாசிரியர்களும் கெட்டித்தனமாக மறைத்துவிட்டார்கள்.

இந்தப் பழைய வரலாறு ஒருபுறம் இருக்க, கொழும்பு பல்கலைக்கழகத்தில் கணித விரிவுரையாளராக இருந்து "கணித மேதை" என வர்ணிக்கப்படும் ( இதில் சிலர் இவர் எலிசபெத் மகாராணிக்கு கணக்குப் படிப்பித்தவர் என்று 'கணக்கு' விடுவதும் உண்டு) இவர், 1960களில் வட பகுதியில் உள்ள பிரசித்தி பெற்ற கோயிலான மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலில் தாழ்த்தப்பட்ட மக்கள் ஆலயப் பிரவேசப் போராட்டம் நடத்திய பொழுது அதற்கெதிராக குண்டர்களையும், பொலிசாரையும் வைத்துக்கொண்டு நடத்திய வெறியாட்டம் சாதாரணமானதா?

நீதிமன்றம் தாழ்த்தப்பட்ட மக்களை கோயிலுக்குள் அனுமதிக்க வேண்டும் என்று தீர்ப்பு வழங்கிய பின்பும், அதை எதிர்த்து பிரித்தானிய பிரிவுகவுன்சிலுக்கு அப்பீல் செய்து அதிலும் தோல்விகண்ட 'வீரன்' அல்லவா?

இப்படியான ஒரு சாதி வெறியனுக்கு, அதுவும் தமிழ் சனத்தொகையில் மூன்றிலொரு பங்கினரான தாழ்த்தப்பட்ட மக்கள் ஆலயத்துக்குள் சென்று வழிபட முடியாது என்று கோரத்தாண்டவம் ஆடிய ஒருவருக்கு, தமிழ் மண்ணில் சிலை அமைப்பது அந்த மக்களை மட்டுமின்றி, முழுத் தமிழினத்தையும் அவமரியாதைக்குள்ளாக்கும் விடயமல்லவா?

தாழ்த்தப்பட்ட மக்களை மட்டுமின்றி, தமிழ் சமூகத்தின் வீர பாரம்பரியமிக்க வன்னி மக்களையும் இவர் அவமரியாதைக்கு உள்ளாக்கியிருக்கிறார். 1947 முதல் 1960 வரை வவுனியா நாடாளுமன்ற உறுப்பினராக வன்னி மக்களால் தெரிவு செய்யப்பட்ட இவர், பின்னர் நடந்த தேர்தலில் தெரிவு செய்யப்படாமல் அந்த மக்களால் தோற்கடிக்கப்பட்டது ஏன்?

பின்னர் இவர் வவுனியாவில் போட்டியிட்ட பொழுது இவரை எதிர்த்து 'ஒறிஜினல்' வன்னியரான தா.சிவசிதம்பரம் போட்டியிட்டார். தேர்தல்களின் போது வாக்காளர்களைக் கவர்வதற்கு வேட்பாளர்கள் அன்றும் இன்றும் மதுபானம் விநியோகிப்பது நடைமுறையில் இருந்துவரும் பகிரங்க இரகசியம். ஆனால் சிவசிதம்பரம் வாக்காளர்களுக்கு சாராயம் கொடுக்கிறார் என்பதை அறிந்த சுந்தரலிங்கம், அதை வன்னி மக்களை அவமரியாதைப்படுத்தும் துரும்புச் சீட்டாகப் பயன்படுத்தினார். அதாவது, "வன்னியான்கள் வைக்கல் கத்தையைக் கண்ட மாடுகள் போல, சாராயத்தைக் கண்டால் அந்தப் பக்கம் போயிடுவாங்கள்" என தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் சுந்தரலிங்கம் பேசியதன் காரணமாகவே ஆத்திரம் கொண்ட வவுனியா (வன்னி) மக்கள் இவரைத் தோற்கடித்து தா.சிவசிதம்பரத்தை வெற்றிபெற வைத்தனர். இந்த உண்மை சுந்தரலிங்கத்துக்கு சிலை வைக்கப் புறப்பட்டிருப்பவர்களுக்கு அல்லது இன்றைய அரசியல்வாதிகள் எத்தனை பேருக்குத் தெரியும்?

எனவே இத்தகைய ஒரு பிற்போக்குவாதிக்கு தமிழ் தேசியத்தின் பெயரால் சிலை வைப்பதின் மூலம், தமிழ் தேசியத்துக்கும், தமிழ் மக்களுக்கும் அவமரிதையை ஏற்படுத்த வேண்டாம் என வவுனியா நகர சபையை அனைவரும் வலியுறுத்த வேண்டும்.

**9ம் பக்கத்தொடர்ச்சி....**

இதைப் பார்க்கின்றனர். இதுபற்றி அந்த நாட்டு மக்களுடன் நான் உரையாடிய பொழுது, தங்கள் தாய்நாட்டின் விடுதலையை எந்த வழியிலாவது அழித்துவிட அந்த மேலாதிக்க சக்தி ஒன்றன் பின் ஒன்றாகத் தருணம் பார்த்துக் கொண்டிருக்கும் நிலையில், தமது நாட்டில் ஒரு அதிகாரத்துவமிக்க அரசு அமைப்பு இருப்பது அவசியமானது என்று குறிப்பிட்டனர்.

யப்பானிய காலனித்துவ ஆக்கிரமிப்பாளர்களுக்கெதிராக ஆரம்பிக்கப்பட்ட இந்த தற்காப்புப் போராட்டம், கொரியாவின் வடக்கு தெற்கு மக்கள் இணைக்கப்பட்டு மகிழ்ச்சியடையும் போதே, மனித முன்னேற்றத்துக்கான இந்தப் போராட்டம் முடிவடையும் என வட கொரிய அரசு நம்புகின்றது. "நாம் இந்த உலகில் பொறாமைப்பட எதுவுமில்லை" என்ற அவர்களது சுலோகம் ஒரு சரியான உணர்வை ஏற்படுத்தியிருப்பதை எங்கும் காணலாம். அவர்கள் தமது பொது இடங்களை விளம்பரங்களால் அசிங்கப்படுத்தாமல் இருப்பதுடன், ஒரு சிறந்த சமூகத்தை உருவாக்கும் வகையில் மக்களை ஆகர்சிக்கும் வகையில் அந்த இடங்களில் ஓவியங்களைத் தீட்டி வைத்திருக்கின்றனர். அவர்கள் எல்லோரும் எம்மிடம் கேட்பது என்னவென்றால், 'அமெரிக்க இராணுவம் எமது தாய்நாட்டை விட்டு வெளியேறி எம்மை எமது பாட்டில் வாழவிட வேண்டும்' என்பதுதான்.

ஆம், அங்கு நாம் செலவிட்ட காலம் வரையறுக்கப்பட்டது என்ற போதிலும், அங்கு நாம் பார்த்தவற்றை நேர்மையாகக் கூறுவதானால், அவர்கள் சிறந்த முறையில் கட்டமைக்கப்பட்டுள்ள, சமூக சமத்துவத்தைப் பேணுகின்ற, செயற்பாட்டில் ஊக்கமுள்ள சமூகமாக உள்ளார்கள். அதற்கான நல்ல காரணம் என்னவெனில், அவர்கள் கடந்த காலத்தில் பட்ட துன்பங்களுக்கான பலன்களை இப்பொழுது அறுவடை செய்கின்றனர்.

*(கனடா கம்யூனிஸ்ட் கட்சியின் இருவார வெளியீடான People's Voice பத்திரிகையில் பிரசுரமான இக்கட்டுரையைத் தமிழில் அழகுறத் தந்திருப்பவர் தவம்)*

மூலக்கட்டுரையின் இணைப்பு:
http://honisoit.com/2018/08/nine-days-in-north-korea/

# சம்பந்தன் மீது சிவசக்தி ஆனந்தன் குற்றச்சாட்டு!

ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியைச் சேர்ந்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தான் மன்றில் பேசுவதற்கான உரிமையை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் தொடர்ந்து மறுத்து வருவதாகக் குற்றம் சுமத்தியிருக்கிறார். வன்னி மாவட்ட மக்களின் சார்பாகத் தெரிவான தான் அம்மக்களின் சார்பாக நாடாளுமன்றத்தில் பேசுவதை சம்பந்தன் தடுப்பது தனது கருத்துச் சுதந்திரத்தை மறுப்பதாகும் எனவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

தான் இது சம்பந்தமாக முன்னைய ஆட்சியில் சபாநாகர் கரு ஜயசூரியாவிடம் முறையிட்டிருந்தும், இது சம்பந்தமாக இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனக் குறிப்பிட்ட ஆனந்தன், நாட்டு மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதாகத் தேர்தலின்போது வாக்குறுதி கொடுத்து ஆட்சிக்கு வந்த பழைய அரசாங்கத்தின் இலட்சணம் இப்படித்தான் இருந்ததெனக் கூறியுள்ளார்.

ஆனந்தனின் பேச்சுரிமையை சம்பந்தன் கட்டுப்படுத்துவது குறித்து கருத்துத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன, "ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் தன்னைத் தெரிவு செய்த மக்கள் சார்பாக உரையாற்றுவதைத் தடுப்பது நியாயமற்றதாகும்" எனத் தெரிவித்திருக்கிறார்.

# மைத்திரி, கோத்தாபய கொலை முயற்சி அம்பலமாகியதிலிருந்து இலங்கையில் நடப்பதென்ன?

14.09.2018:
இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ ஆகியோரைக் கொலை செய்வதற்கான சதி முயற்சியில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க உட்பட பொலிஸ் மா அதிபர், பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக டி சில்வா ஆகியோர் தொடர்புபட்டுள்ளனர் என கூட்டு எதிரணியில் அங்கம் வகித்த பாராளுமன்ற உறுப்பினர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ச ஆகியோருக்கு உயிர் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் சதி முயற்சி குறித்து, தொலைபேசி உரையாடல் ஒன்று 12.09.2018 இல் வெளியாகியது. "ஊழலுக்கு எதிரான படையணி" என்ற அமைப்பின் செயற்பாட்டுப் பணிப்பாளர் நாமல் குமார இத்தொலைபேசி உரையாடலை வெளியிட்டிருந்தார். பயங்கரவாத தடுப்புப் பிரிவின் பிரதி பொலிஸ்மா அதிபர் நாலக்க டி சில்வாவுடன் இந்த உரையாடல் இடம்பெற்றதாகவும், தான் இது தொடர்பாகக் குறித்த பொலிஸ் அதிகாரியுடன் பேசியதாகவும், நாமல் குமார தெரிவித்திருந்தார். நாமல் குமாரவுடன் தொடர்பு வைத்திருந்ததாகக் கூறப்படும் இந்தியப்பிரஜை ஒருவர் குற்றப் புலனாய்வுப்பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

16.09.2018:
பயங்கரவாத தடுப்புப் பிரிவின் பிரதி பொலிஸ்மா அதிபர் நாலக்க டி சில்வா பொலிஸ் திணைக்களத்தின் தகவல் தொடர்பு பிரிவுக்கு இடம்மாற்றஞ் செய்யப்பட்டார்

18.09.2018:
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் கோத்தாபய ராஜபக்ஷ ஆகியோரைக் கொலை செய்வதற்கான சதித்திட்டம் தொடர்பான தகவல்கள் வெளியானதைத் தொடர்ந்து, ஐக்கிய தேசிய முன்னணி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினரிடையே பாராளுமன்றத்தில் கடுமையான வாக்குவாதமும் சர்ச்சையும் ஏற்பட்டது.

16.10.2018:
கோத்தாபய ராஜபக்ஷவையும் தன்னையும் கொலை செய்யும் முயற்சியில் இந்திய புலனாய்வுப்பிரிவான 'றோ' பின்னணியில் இருந்ததாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மந்திரி சபைக்கூட்டத்தில் தெரிவித்தார். எனினும் இந்தக் கொலை முயற்சி விவகாரம் இந்தியப்பிரதமர் நரேந்திர மோடிக்குத் தெரியாதெனவும் அவர் தெரிவித்தார்.

17.10.2018:
சட்டம் மற்றும் ஒழுங்கு (முன்னாள்) அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டாரா பிரதி பொலிஸ்மா அதிபர் நாலக்க டி சில்வாவை பதவியிலிருந்து இடைநீக்குவதற்கு தேசிய பொலிஸ் திணைக்களத்திற்கு பரிந்துரை செய்தார். அமைச்சரின் அப்பரிந்துரையை தேசிய பொலிஸ் திணைக்களமும் அங்கீகரித்தது.

24.10.2018:
19.10.2018, 20.10.2018, 23.10.2018 ஆகிய மூன்று நாட்களாக தொடர்ந்து நாலக்க டி சில்வா குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரிக்கப்பட்ட பின்னர், அவர் கைது செய்யப்பட்டார்.

26.10.2018:
ஐக்கிய தேசிய முன்னணி மற்றும் ஐக்கிய சுதந்திர மக்கள் கூட்டமைப்பு இணைந்த தேசிய அரசாங்கம் கலைக்கப்பட்டு, இலங்கையின் புதிய பிரதமராக ஐக்கிய சுதந்திர மக்கள் கூட்டமைப்பின் சார்பில் மகிந்த ராஜபக்ச, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பதவிப்பிரமாணம் எடுத்தார்.

29.10.2018:
புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை பதவியேற்பு நிகழ்வு ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

09.11.2018:
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தைக் கலைத்து 2019 ஆம் ஆண்டு 5ந் திகதி புதிய தேர்தல் நடாத்தப்படுமென அறிவித்தார்.

12.11.2018:
இலங்கை பாராளுமன்றம் கலைக்கப்பட்டது தொடர்பான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவின் அறிவிப்புக்கு எதிராக, எதிர்க்கட்சிகளான ஐக்கிய தேசியக்கட்சி, தமிழ் தேசியக்கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் மற்றும் பொது அமைப்புகள் உச்ச நீதிமன்றத்தில் 17 மனுக்களைத் தாக்குதல் செய்தன.

13.11.2018:
இலங்கை பாராளுமன்றம் கலைக்கப்பட்டது தொடர்பான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவின் அறிவிப்புக்கு டிசம்பர் 7ந் திகதி வரை இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்து உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

14.11.2018:
பாராளுமன்றம் கலைக்கப்பட்டது தொடர்பான உச்ச நீதிமன்றத்தின் இடைக்கால தடையுத்தரவைத் தொடர்ந்து பாராளுமன்றம் கூடியது. பாராளுமன்றத்தின் பார்வையாளர் வரிசையில் வெளிநாட்டுத் தூதுவர்கள், ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் உட்பட பல வெளிநாட்டவர்கள் அமர்ந்திருந்தனர்.

இலங்கை ஜனாதிபதியால் 26.10.2018 இல் புதிதாக நியமிக்கப்பட்ட பிரதமர் மகிந்த ராஜபக்ச மற்றும் அமைச்சரவைக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்று மக்கள் விடுதலை முன்னணியால் (ஜேவிபி) பாராளுமன்ற செயலாளருக்கு அனுப்பப்பட்டது. இப்பிரேரணையில் ஐக்கிய தேசிய முன்னணி, தமிழ் தேசியக்கூட்டமைப்பு மற்றும் மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த 122 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டிருந்தனர். பின்னர் வாய்மொழி வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு, நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் அறிவித்தார். இதன்போது நம்பிக்கையில்லாப் பிரேரணை பாராளுமன்றத்தின் ஒழுக்க விதிகளுக்கு முரணான வகையில் கொண்டு வரப்பட்டுள்ளதாகக் கூறி ஆளுங்கட்சியினர் வெளிநடப்பு செய்தனர்.

15.11.2018
பாராளுமன்றம் கூடியபோது, மீண்டும் பாராளுமன்றத்தின் பார்வையாளர் வரிசையில் வெளிநாட்டுத் தூதுவர்கள், ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் உட்பட பல வெளிநாட்டவர்கள் அமர்ந்திருந்தனர்.

பாராளுமன்றத்தில் கூச்சலும் குழப்பமுமாக பாராளுமன்ற உறுப்பினர்களிடையே மோதல்கள் ஏற்பட்டன. ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்த பாலித தேவப்பெருமா பாராளுமன்றத்தில் கத்தியுடன் காணப்பட்டார். திமுத் அமுனுகம என்ற பாராளுமன்ற உறுப்பினர் காயமடைந்தார்.

16.11.2018:
பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் சமூகம் தராததால், பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தலைமையில் கூடிய பாரளுமன்றம் 5 நிமிடத்தில் கலைந்தது.

18.11.2018:
பாராளுமன்றத்தின் தற்போதைய நிலைமை மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக ஜனாதிபதி சர்வகட்சி பிரதிநிதிகளை தனது செயலகத்தில் சந்தித்தார். அரசாங்கத்திற்கு எதிராக கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பில் தான் ஒரு நிலைப்பாட்டிற்கு வரவேண்டுமானால்

**தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க...**

**முன்பக்கத் தொடர்ச்சி...**

பலர் ஏற்பட்டுள்ள நிலைமைகள் சம்பந்தமாக வானவில்லால் எப்படி அச்சொட்டாக ஆரூடம் கூற முடிந்தது எனத் தமது வியப்பையும் அதே நேரத்தில் தமது பாராட்டையும் தெரிவித்துள்ளனர்.

இதில் வியப்பதற்கு எதுவும் இல்லை. நாட்டின் அரசியல் நிலைமைகளை யதார்த்தபூர்வமாகவும் முற்போக்கு கண்ணோட்டத்துடனும் தொடர்ந்து அவதானித்து வந்தால் எவரும் சரியானதொரு முடிவுக்கு வர முடியும். வானவில் பத்திரிகை ஆசிரியர் குழுவைப் பொறுத்தவரையில் அதில் அங்கம் வகிக்கும் பெரும்பான்மையானோர் 50 வருடங்களுக்கும் மேலான நேரடி அரசியல் அனுபவத்தைக் கொண்டவர்கள் என்பது இதில் குறிப்பிட வேண்டிய முக்கியமான விடயமாகும்.

ஆனால் நாம் எதிர்பார்க்காமல் நடைபெற்ற முக்கியமான விடயம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கொண்ட முக்கியமான முடிவுகள்தான். (இதை அவர் 2015 ஜனவரி 8இல் மேற்கொண்ட பாரதூரமான தவறுக்கான பிராயச்சித்தமாகவும் கொள்ளலாம்)

ஏனெனில், ஏகாதிபத்திய சக்திகள் இலங்கையில் தமக்கு சாதகமான ஆட்சி மாற்றம் ஒன்றைக் கொண்டு வரும் புதிய முயற்சியாக 2015 ஜனவரி 8 ஜனாதிபதி தேர்தலின் போது இரண்டு விடயங்களைக் கைக்கொண்டன.

ஒன்று, ஆட்சியில் இருந்த சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் நீண்டகால உறுப்பினரும், அக்கட்சியின் பொதுச் செயலாளருமான மைத்திரிபால சிறிசேனவை அக்கட்சியிலிருந்து வஞ்சகத்தனமாகப் பிரித்தெடுத்து ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தியது. அதற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகவைப் பயன்படுத்தியது. இரண்டாவது, ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதி தேர்தலில் தனது சொந்த வேட்பாளரை நிறுத்தாமல் மைத்திரியை பொது வெட்பாளராக ஏற்றுக் கொள்ள வைத்தது.

இத்தகைய நடவடிக்கைகள் மூலமே இலங்கையில் ஏகாதிபத்திய சக்திகள் தமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டன.

ஜனாதிபதி தேர்தலைத் தொடர்ந்து பதவியில் இருந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் கூடிய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தைக் கலைத்து 47 உறுப்பினர்கள் மட்டும் கொண்ட ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க புதிய ஜனாதிபதி மைத்திரியினால் பிரதமராக்கப்பட்டார். அப்பட்டமாக ஜனநாயத்தை மீறிய இச்செயல் செயல் குறித்து அப்போது 'சர்வதேச சமூகம்' எனப்படும் மேற்கு நாடுகள் எவ்வித எதிர்ப்பினையும் வெளிப்படுத்தவில்லை.

'நல்லாட்சி' என்ற பெயரில் மூன்றரை வருடங்களாக நடைபெற்ற ரணில் – மைத்திரி ஏகாதிபத்திய சார்பு அரசு நாட்டு மக்களுக்கு தேர்தல் காலங்களில் கொடுத்த எவ்வித வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை. மாறாக நாட்டு மக்கள் மேல் பலவிதமான வரிச்சுமைகள் ஏற்றப்பட்டன. விலைவாசி பல மடங்கு அதிகரித்தது. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்தது. ரூபாயின் மதிப்பு மிகவும் மோசமாக வீழ்ச்சியடைந்தது. நாட்டின் பொதுச் சொத்துக்கள் அந்நிய கொம்பனிகளுக்கு அறாவிலைக்குத் தாரை வார்க்கப்பட்டன. கல்வி, போக்குவரத்து மற்றும் சுகாதாரத் துறைகள் படிப்படியாக தனியார்மயப்படுத்தப்பட்டு வந்தன.

இன்னொரு பக்கத்தில் ஜனநாயக அரசியலுக்கு முரணாக ஐம்பதுக்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்ட கூட்டு எதிரணியைப் புறக்கணித்துவிட்டு 16 பேர் மட்டும் கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிர்க்கட்சி அந்தஸ்து வழங்கப்பட்டது. பிரதமர் ரணில், ஜனாதிபதி மைத்திரியின் பல அதிகாரங்களை பலவந்தமாக எடுத்துக்கொண்டு எதேச்சாதிகாரமாக செயல்படத் தொடங்கினார். எதிர்க்கட்சியினரை ஒடுக்குவதற்காக அவர்கள் மீது வகைதொகையில்லாத பொய் வழக்குகள் போடப்பட்டன.

35 வருடப் போரின்போது கூட ஒழுங்காகத் தேர்தல்கள் நடந்து வந்த இலங்கையில் 'நல்லாட்சி' பதவிக்கு வந்தபின்னர் 3 வருடங்களாக உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வந்தன. பதவி முடிந்த மாகாண சபைகளுக்கும் இன்னமும் தேர்தல்கள் நடத்தப்படவில்லை. கடைசியாக ஒருவாறு பலத்த அழுத்தங்களுக்கு மத்தியில் கடந்த பெப்ருவரி 10இல் உள்ளூராட்சி தேர்தல்கள் நடத்தப்பட்ட போது ஆட்சிப் பங்காளிகளான இரு கட்சிகளும் படுதோல்வியடைந்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான எதிரணி அமோக வெற்றி பெற்றது.

இவ்வாறு 'நல்லாட்சி' என்று கூறப்பட்ட அரசு நடைமுறையில் நாசகார ஆட்சியாகவே கடந்த மூன்றரை வருடங்களாகச் செயற்பட்டது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் அரச கட்சிகளுக்கு ஏற்பட்ட தோல்வியைத் தொடர்ந்து அவற்றுக்கிடையே இருந்த மோதல் உக்கிரமடைந்தது. இருந்தாலும் ரணிலும் மைத்திரியும் ஆட்சியை ஏதோ ஒருவிதமாக ஓட்டி வந்தனர். சிறீலங்கா சுதந்திரக் கட்சியை நல்லாட்சி அரசிலிருந்து விலக்கும்படி எதிரணியினர் பலமுறை வலியுறுத்தியும் மைத்திரி ரணிலுடன் ஆட்சியைத் தொடர்ந்து கொண்டே இருந்தார்.

ஆனால் ஒக்ரோபர் 26ஆம் திகதி யாரும் எதிர்பாராதவிதமாக ரணிலை பிரதமர் பதவியிலிருந்து நீக்கிவிட்டு மகிந்த ராஜபக்சவை பிரதமர் ஆக்கினார் ஜனாதிபதி மைத்திரி. அதுமட்டுமல்லாமல் நாடாளுமன்றத்தை நொவம்பர் 16 வரையும் ஒத்தி வைத்தார். பின்னர் சடுதியாக நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு, 2019 ஜனவரி 5இல் பொதுத் தேர்தல் நடைபெறும் எனவும் அறிவித்தார்.

ஜனாதிபதி அடுத்தடுத்து எடுத்த இந்த அதிரடி நடவடிக்கைகள் எல்லாம் இலங்கை அரசியல் சக்திகளை மட்டுமின்றி சர்வதேச அரசியல் சக்திகளையும் திகைப்பில் ஆழ்த்தின. முன்னர் ''ஜனநாயகத்தின் காவலன்'' என அவை வர்ணித்த மைத்திரியை இப்பொழுது ''சர்வாதிகாரி'' என வர்ணிக்க ஆரம்பித்தன.

மைத்திரியின் நடவடிக்கைகள் அரசியல் சாசனத்துக்கு விரோதமானவை என அந்த சக்திகள் தொடர்ந்து கூப்பாடு போட்டு வருகின்றன. ஆனால் மைத்திரி எடுத்த நடவடிக்கைகள் அனைத்தும் அரசியல் சாசனம் அவருக்கு வழங்கியுள்ள அதிகாரத்தின் அடிப்படையிலேயே எடுக்கப்பட்டுள்ளன என நாட்டின் பெரும்பான்மையான அனுபவமிக்க சட்ட வல்லுனர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இந்த இடத்தில் ஒரு முக்கியமான கேள்வி எழுகின்றது. அதாவது மூன்றரை வருடங்களாக ரப்பர் போல ரணிலுடன் இழுபட்டுக் கொண்டிருந்த மைத்திரி ஒக்ரோபர் 26இல் ஏன் திடீரென இப்படியான அதிரடி நடவடிக்கையில் இறங்கினார் என்ற கேள்வி எழுகின்றது. அதுவும் ரணிலை பிரதமர் பதவியில் இருந்து அகற்றிய பின்னர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில், ரணிலுடன் இணைந்து ஆட்சியமைத்த இரண்டொரு மாதங்களிலேயே அவருடன் இணைந்து வேலை செய்வது முடியாத காரியம் என்பதைத் தான் புரிந்து கொண்டதாகக் கூறும் மைத்திரி, அப்படியானால் விரைந்து நடவடிக்கை எடுக்காமல் ஏன் பொறுத்திருந்தார்.

2015 ஜனவரி 8இல் நாட்டு மக்கள் தனக்கு வழங்கிய தீர்ப்பை ஊதாசீனப்படுத்தக் கூடாது எனப் பொறுத்திருந்த மைத்திரி ஏன் ஒக்ரோபர் 26இல் பொங்கியெழுந்தார்?

இங்குதான் உண்மை பொதிந்து கிடக்கிறது. உண்மை என்னவென்றால், தன்னையும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்சவையும், ராஜபக்ச குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்களையும் உள்நாட்டு – வெளிநாட்டு சக்திகள் கொலை செய்வதற்கு திட்டமிட்டு இருக்கிறார்கள் என்ற விடயம் அம்பலத்துக்கு வந்ததும்தான் நிலைமை கைமீறிப் போய்விட்டதை மைத்திரி சடுதியாக உணர்ந்தார்.

இந்தக் கொலைச் சதி சம்பந்தமாக பிரதி பொலிஸ் மாஅதிபர் ஒருவரும், இந்தியாவின் ''றோ'' என்ற உளவு அமைப்பின் தொடர்பாளர் ஒருவரும் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நாட்டின் ஆட்சித் தலைவரான ஜனாதிபதியை கொலை செய்யும் சதி முயற்சியில் பிரதி பொலிஸ் மாஅதிபருக்கு தொடர்பு இருக்கின்றது என்ற தகவல் வந்த பின்பும் பொலிஸ் துறைக்கு பொறுப்பாக இருந்த பிரதமர் ரணில் அந்தப் பொலிஸ் அதிகாரி மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. பின்னர் பலத்த வலியுறுத்தலுக்கு பின்னரே அந்த அதிகாரி லீவில் அனுப்பப்பட்டார். அவரைக் கைது செய்து விசாரிக்கும்படி விடுத்த வேண்டுகோளையும் ரணில் உதாசீனப்படுத்தினார். பின்னர் தொடர்ச்சியான வலியுறுத்தலுக்குப் பின்னரே அந்த பொலிஸ் அதிகாரி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் தொடர்ந்து ஐந்து நாட்கள் தினமும் பலமணி நேரம் விசாரிக்கப்பட்டார். அந்த விசாரணையின் அடிப்படையில் அவர் சந்தேக நபராக இனம் காணப்பட்டு, கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதில் இன்னொரு முக்கியமான விடயம் என்னவெனில், இந்த பொலிஸ் அதிகாரி பற்றிய விசாரணை அறிக்கையை ஜனாதிபதி மைத்திரி கோரியும் பிரதமர் ரணில் அதை அனுப்பாது தவிர்த்துள்ளார். இவையெல்லாம் சேர்ந்து இந்த கொலை சதி முயற்சியில் ஐ.தே.கவுக்கு தொடர்பிருக்கலாம் என்ற திடமான சந்தேகம் ஜனாதிபதி மைத்திரிக்கு எழுந்தது நியாயமானதே. இந்த நிலைமையில் ரணில் அதிகாரத்திலிருப்பது மிகவும் ஆபத்தானது என்ற முடிவுக்கு அவர் வந்திருந்தால் அது யதார்த்தமானது.

'நல்லாட்சி' அரசில் 2015 ஜனவரி 8 முதல் ஒன்றாக இணைந்திருந்தவர்கள் ஜனாதிபதியை ஏன் கொலை செய்ய திட்டமிட்டார்கள் என்ற கேள்வி பலருக்கும் எழுவது நியாயமானது. எல்லாவற்றுக்கும் அரசியல் அடிப்படைதான் காரணம் என்றபடியால் இதற்கும் அரசியல் அடிப்படைதான் காரணம்.

ஐ.தே.கவுக்கும் அதன் வெளிநாட்டு எஜமானர்களுக்கும் உள்ள முதலாவது பிரச்சினை இவ்வருடம் பெப்ருவரி 10இல் நடைபெற்ற உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் கூட்டு எதிரணி பெற்ற அமோக வெற்றியாகும். இந்த தேர்தலில் கூட்டு எதிரணி 46 வீதம் வரையிலான வாக்குகளைப் பெற்றிருந்தது. அதே நேரத்தில் மைத்திரி தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சி அணி சுமார் 15 வீதமான வாக்குகளைப் பெற்று மூன்றாவதாக வந்திருந்தது. இந்த நிலைமை எதைக் காட்டுகிறது என்றால், சுதந்திரக் கட்சி மைத்திரி அணி, மகிந்த அணி என பிளவுபடாமல் இருப்பின் அடுத்த பொதுத் தேர்தல் - ஜனாதிபதித் தேர்தல் என்பவற்றில் 60 வீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று அவர்கள் வெற்றியீட்டுவர் என்ற உண்மையை எடுத்துக் காட்டியது. அதைத் தடுப்பதே உள்நாட்டு – வெளிநாட்டு பிற்போக்கு சக்திகளின் தந்திரோபாயமாக இருந்து வந்துள்ளது.

ஆனால், முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் புதல்வரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச அண்மையில் தெரிவித்த கருத்தின்படி, மைத்திரி – மகிந்த தரப்புக்கு இடையில் பெப்ருவரி உள்ளூராட்சி தேர்தல் நடந்த கையோடு ஒற்றுமைப் பேச்சுவார்த்தை ஆரம்பித்துவிட்டது. ஏற்கெனவே நல்லாட்சி அரசுக்குள் ரணிலுக்கும் மைத்திரிக்கும் இடையில் முரண்பாடு முற்றிவிட்ட நிலையில், இந்த ஒற்றுமைப் பேச்சுவார்த்தை வெற்றியில் முடியலாம் என்ற வலுவான சந்தேகத்தை ஐ.தே.கவுக்கும் அதன் சகாக்களுக்கும் ஏற்படுத்திவிட்டது.

மக்கள் ஆதரவு தமக்கு எள்ளளவும் இல்லை என்ற நிலையில் பிற்போக்கு சக்திகள் மாற்று வழியைத் தேட ஆரம்பித்துள்ளனர். அந்த மாற்றுவழிதான் ஜனாதிபதி கொலை முயற்சி.

இலங்கையின் அரசியல் சாசனப்படி அதிகாரத்திலிருக்கும் ஜனாதிபதி ஒருவர் இறக்க நேரிட்டால், அல்லது அவர் பதவி விலகினால், பிரதமர் பதவியில் இருப்பவரே இயல்பாக அடுத்த ஜனாதிபதி தேர்தல்வரை ஜனாதிபதியாக பதவி வகிப்பார். அதன்படிதான் 1990இல் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ஆர்.பிரேமதாசவை புலிகள் தற்கொலைக் குண்டுதாரி மூலம் கொலை செய்துவிட, பிரதமராக இருந்த டி.பி.விஜயதுங்க ஜனாதிபதியானார்.

எனவே இன்றைய சூழலில் ஜனாதிபதி மைத்திரியை கொலை செய்துவிட்டால் இயல்பாகவே பிரதமர் பதவியில் இருக்கும் ரணில் ஜனாதிபதியாக வருவார். பின்னர் அவர் தனக்குள்ள நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்தி அடுத்து வரும் பொதுத் தேர்தல், ஜனாதிபதி தேர்தல் எனபனவற்றில் ஐ.தே.க. வெற்றியீட்ட முயற்சிக்க முடியும்.

மைத்திரியை கொலை செய்தாலும், ராஜபக்ச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கவுக்கு சவாலாக இருப்பார்கள். புலிகளுடனான போரில் அரசாங்கத்தை வெற்றிக்கு இட்டுச் சென்றவர்கள் என்ற வகையில் நாட்டு மக்கள் மத்தியில் அவர்களுக்கு அபரிமிதமான செல்வாக்கு உள்ளதென்பதை யாரும் மறுத்துவிட முடியாது. அரசியல் சட்டத்தின் 19ஆவது திருத்தத்தின்படி மகிந்த ராஜபக்ச ஜனாதிபதித் தேர்தலில் மூன்றாவது முறையாகப் போட்டியிட முடியாவிட்டாலும், புலிகளுடனான போரில் தீர்க்கமான பாத்திரம் வகித்த அவரது சகோதரரான முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய போட்டியிட்டு வெற்றிபெறக்கூடிய வாய்ப்பு இருந்தது. அதற்கான முயற்சிகளும் நடந்து வந்தன. அதுமாத்திரமின்றி மகிந்தவின் இன்னொரு சகோதரரும், முன்னாள் சபாநாயகருமான சாமல் ராஜபக்சவின் பெயரும் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக பிரஸ்தாபிக்கப்பட்டு வந்தது.

இந்தச் சூழ்நிலையில்தான் ஜனாதிபதி மைத்திரியை மட்டுமின்றி, கோத்தபாய ராஜபக்ச உட்பட ராஜபக்ச குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும் தீர்த்துக்கட்ட முயற்சி எடுக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

ஏகாதிபத்திய – பிற்போக்கு சக்திகளைப் பொறுத்தவரையில், போலியான நாடாளுமன்ற ஜனநாயகம் தங்களுக்கு சாதகம் இல்லாமல் அமையும் போது, நேரடி பலாத்காரத்தில் இறங்கியதற்கு உலக வரலாற்றில் பல உதாரணங்கள் உண்டு. கொங்கோவின் பட்ரிஸ் லுமும்பாவில் தொடங்கி, இலங்கையின் பண்டாரநாயக்க, சிலியின் அலண்டே, இந்தியாவின் இந்திரா காந்தி, பங்களாதேசின் முஜிபுர் ரஹ்மான் என உதாரணங்கள் உண்டு.

இந்த நிலைமைகளில், இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அந்த நாட்டின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பதவி நீக்கம் செய்தது, நாடாளுமன்றத்தைக் கலைத்தது, பொதுத் தேர்தலுக்கு திகதி குறித்தது எல்லாமே இலங்கையின் அரசியல் சாசனத்துக்கு அமைவாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மட்டுமல்லாது, அரசியல் ரீதியாக இலங்கையின் தேசிய சுதந்திரம், சுயாதிபத்தியம், பிரதேச ஒருமைப்பாடு, மக்களின் இறையாண்மை, ஜனநாயக அரசமைப்பு என்பனவற்றைப் பாதுகாக்க எடுத்த அத்தியாவசிய நடவடிக்கைகளாகும். இலங்கை ஜனாதிபதியின் இந்த நடவடிக்கைகளை இலங்கையிலும், உலகம் முழுவதிலும் பரந்து வாழும் ஏகாதிபத்திய – எதிர்ப்பு முற்போக்கு சிந்தனையுள்ளவர்களும், ஜனநாயகத்தை நேசிப்பவர்களும் எந்தவித தயக்கமும் இன்றி ஆதரிப்பது கடமையாகும்.

இலங்கை ஜனாதிபதியின் நடவடிக்கைகளை அரசியல் சாசனத்துக்கு முரணானது, ஜனநாயகத்துக்கு விரோதமானது என ஓலமிடுபவர்கள் அனைவரும் ஆடு நனைகிறது என்று ஓலமிடும் ஓநாய்க்கு சமமானவர்கள்.

உண்மையில் அரசியல் சாசனத்தையும் ஜனநாயக நெறிமுறைகளையும் மீறி செயற்பட்டுக் கொண்டிருப்பவர்கள் பிரதம மந்திரி பதவி போன பின்பும் பிரதமர்களின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரி மாளிகையை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் ரணில் விக்கிரமசிங்கவும், நாடாளுமன்ற சம்பிரதாயங்களையும் நடைமுறைகளையும் மீறி செயற்பட்டுக் கொண்டிருக்கும் அவரது கட்சியைச் சார்ந்த சபாநாயகர் கரு ஜெயசூரியவும் தான்.

தற்போது இலங்கையில் நடைபெறும் போராட்டம் என்பது ஏகாதிபத்திய, பிற்போக்கு சக்திகளுக்கும், இலங்கை மக்களுக்கும் இடையில் நடைபெறும் வாழ்வா சாவா என்ற ஒரு ஜீவ மரணப் போராட்டமாகும்.

# மைத்திரியை கொல்ல உருவாக்கப்பட்டதே ‘19’

19 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் உருவாக்கப்படும்போதே தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கொலை செய்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி திட்டமிட்டிருந்ததாக பாராளுமன்ற உறுப்பினர் சனத் நிசங்க தெரிவித்துள்ளார்.

பிரதமர் அலுவலகத்தில் நேற்று புதன்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் முடிந்தவுடன் பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் நடத்தியிருக்க வேண்டும். ஆனால், அதனைச் செய்யாது தேர்தலை ஒத்திவைத்து தேர்தலை நடத்தியமையினால் எங்களது வாக்கு வங்கியும் குறைந்தது.

அதன் பின்னர் பெரும்பான்மை குறைவு காரணமாக இரு கட்சிகளும் இணைந்து தேசிய அரசாங்கத்தை அமைத்தன. இதனால் நாட்டில் பாரிய பொருளாதார வீழ்ச்சியைக் கண்டதுடன், எமது ஆயட்காலத்தை பாதாளக்குழு தீர்மானிக்கும் அளவிற்கு பயங்கரவாதம் தலைதூக்கியது.

அதையும் தாண்டி ஜனாதிபதியைக் கொலை செய்யும் முயற்சிகளும் வெளிவரத் தொடங்கின. இதனால் தேசிய பாதுகாப்பு பாரிய சவாலுக்கு முகம் கொடுத்தது. அத்தோடு சர்வதேச நாடுகளுக்கு ஏற்ப நாட்டின் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன.

அத்தோடு, ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியைப் பொறுப்பேற்றதிலிருந்து பாரிய நோக்கங்களைக் கொண்டு செயற்பட்டது. அதன்படி அரசியல் அமைப்புத் திருத்தத்தை முன்னெடுத்தது. அதில் மீண்டுமொருமுறை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியாத வகையில் 19 ஆவது திருத்தத்தை கொண்டு வந்தது.

அடுத்து கோத்தபாய, பசில் ராஜபக்ச ஆகியோருக்கு தேர்தலில் போட்டியிட முடியாத வகையில் இரட்டைக் குடியுரிமை கொண்டவருக்கு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியாதென 19 ஆவது திருத்தத்தை கொண்டு வந்து முடக்கியது. அதைத் தாண்டி நாமல் ராஜபக்ச போட்டியிடுவதற்கு வாய்ப்பிருக்கும் என்பதற்காக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுபவர் வயது 30 ஆக இருந்ததை 35 வயதுடையவராக இருக்க வேண்டுமெனவும் குறித்த திருத்தத்தில் யோசனை கொண்டு வந்தது.

ஆகவே இந்தத் திருத்தம் நாட்டுக்குத் தேவையான முறையில் கொண்டு வரப்படவில்லை. அத்தோடு இந்தத் திருத்தம் கொண்டுவர முயற்சித்த வேளையிலேயே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கொலை செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதாவது ஜனாதிபதிக்கு இவ்வாறான சம்பவங்கள் ஏற்பட்டால் பிரதமர் ஜனாதிபதியாக இருப்பார். அல்லது தேர்தலுக்குச் சென்று புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவார்.



ஆனால், 19 ஆவது திருத்தின்படி ஜனாதிபதி உயிரிழக்கும் பட்சத்தில் அவரது பதவிக்காலம் முடியும் வரை பிரதமர் ஜனாதிபதியாகப் பதவி வகிக்க வேண்டும். அதன்படியே சிந்தித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கொலை செய்து தான் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி கதிரையில் அமர்வதற்கே ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டுள்ளார்.

ஆனால், இது வெளிவந்த பின்னரே மைத்திரிபால சிறிசேன மகிந்த ராஜபக்சவை பிரதமராகத் தெரிவு செய்தார். அத்தோடு, பிரதமர் தெரிவு செய்யப்பட்ட முறை சட்டத்திற்கு உட்பட்டே இருக்கிறது எனவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

நன்றி: தினக்குரல் - 22-11-2018

எதுவும் இன்று இருப்பது போல் என்றைக்கும் இருப்பதில்லை. எதுவும் இன்று இருக்கிற இடத்திலேயே என்றைக்கும் இருப்பதில்லை. **- ஏங்கெல்ஸ்**

# சட்டத்தரணிகள் சங்கத்தின் தேசிய கூட்டணியின் தலைவரும் தேசிய கால்நடை அபிவிருத்தி சபை மற்றும் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளருமான ஆர். மனோஜ் கமகே கூறுகிறார்...

கேள்வி: 19ஆவது திருத்தச்சட்டம் ஏன் அறிமுகப்படுத்தப்பட்டது?
பதில்: 19ஆம் திருத்தச் சட்டம் மக்களுக்கு தேவையான ஒன்றல்ல. அது வெளிநாடுகள், அரச சார்பற்ற தெரண்டர் நிறுவனங்கள் மற்றும் புலம்பெயர் தமிழர்களின் தேவைக்காக மேற்கொள்ளப்பட்டதாகும். 62 லட்சம் வாக்காளர்களின் வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உள்ள அதிகாரங்களை குறைத்து நாட்டை கட்டுப்படுத்தும் ஒரு வழியாக முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரது ஆதரவாளர்களினால் அரசாங்கத்துக்கு பிரேரிக்கப்பட்டதே 19 ஆவது திருத்தச்சட்டம்.

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை இரத்துச்செய்ய வேண்டிய தேவை 19ஆவது திருத்த சட்டத்தில் இருக்கவில்லை. முன்னாள் பிரதமரின் நோக்கம் ஜனாதிபதி சிறிசேனவை பிரதமரின் தேவைக்கேற்ப பயன்படுத்துவதாகவே இருந்தது.

அதே நேரம் 19ஆவது திருத்த சட்டம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அவரது மகன்மார் மற்றும் அவரது சகோதரர்கள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் உரிமையை இரத்து செய்வதாகவே இருந்தது. இது 19ஆம் திருத்த சட்டத்தில் மறைக்கப்பட்டிருந்த ஒரு நிரல். இந்த தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல் காரணமாக அரசியலமைப்பின் 19ஆவது திருத்த சட்டம் சாத்தியமற்றதும் முழுமையற்றதுமாக ஆகியது.

கேள்வி: 19வது திருத்தச் சட்டம் எவ்வாறு வரையப்பட்டது?
பதில்: 19வது திருத்தச் சட்டத்தை வரைவதில் வெளிநாடுகளும் அரச சார்பற்ற தொண்டர் நிறுனங்களுமே பின்னணியில் இருந்தன. இந்த அரசியலமைப்பு திருத்தச் சட்டத்துக்கு பங்களிப்பு செய்தவர்களுக்கு ஒரு தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல் இருந்ததே தவிர நாட்டின் நன்மை பற்றிய அக்கறை அவர்களுக்கு இருக்கவில்லை. எனவே இதனை சரியான முறையில் அதனை முன்னெடுத்துச் செல்ல அவர்களால் முடியவில்லை.

19ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராக 12 தரப்பினர் முறைப்பாடுகளை செய்திருந்தனர். எனினும் இது உயர் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லப்பட்ட போது அதில் உள்ள சில சரத்துக்கள் ஜனாதிபதியின் அதிகாரத்தை கட்டுப்படுத்துவது அரசியலமைப்பு மீறலாக உள்ளது என்று கூறப்பட்டது. அது தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்ல வேண்டுமென்றும் கூறப்பட்டது. எனினும் அரசியலமைப்பு சட்டத்துறையினர் உயர் நீதிமன்றத்துக்கு செல்லவில்லை. எனவே அரசியலமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டம் முழுமையடையாமலேயே உள்ளது.

கேள்வி: 19ஆவது திருத்தச் சட்டத்தை எப்படி இரத்து செய்வது?
பதில்: அது இலகுவானது. 19ஆவது திருத்தச் சட்டம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டது. அதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவில்லை. எனவே பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் 19ஆவது திருத்தச் சட்டத்தின் எந்தவொரு பிரிவையும் நீக்க முடியும்.

**நன்றி: தினகரன்**

---

*9ம் பக்கத்தொடர்ச்சி....*

பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களை அழைத்தோ அல்லது இலத்திரனியல் முறையை பயன்படுத்தியோ வாக்கெடுப்பை நடத்த வேண்டியது அவசியமென்று ஜனாதிபதி இச்சந்திப்பின்போது அனைவரிடத்திலும் கேட்டுக்கொண்டார்.

21.11.2018:
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் கோத்தாபய ராஜபக்ஷ ஆகியோரைக் கொலை செய்வதற்கான முயற்சியில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட நாலக்க டி சில்வாவின் விளக்கமறியல் டிசம்பர் 5ந் திகதி வரை நீடிக்கப்பட்டது.

23.11.2018:
பாராளுமன்ற தெரிவுக்குழு உறுப்பினர்களை நியமிப்பதற்காக சபாநாயகர் கரு ஜயசூரியா தலைமையில் பாரராளுமன்றம் கூடியது. பாராளுமன்றம் கூடுவதற்கு முன்னரே கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது. இதில் தெரிவுக்குழுவுக்கு உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டிருந்ததுடன், இணக்கப்பாடு எட்டப்படாத நிலையிலேயே சபை கூடியது. ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பும் ஐக்கிய தேசிய முன்னணியும் தலா ஏழு பெயர்களையும் தமிழ் தேசியக்கூட்டமைப்பும் மக்கள் விடுதலை முன்னணியும் தலா இரண்டு பெயர்களையும் பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு பிரேரித்து இருந்தன. பாராளுமன்ற தெரிவுக்குழு உறுப்பினர்களாக ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பிலும் ஐக்கிய தேசிய முன்னணியிலும் முறையே ஐந்து பேரையும் தமிழ் தேசியக்கூட்டமைப்பிலும் மக்கள் விடுதலை முன்னணியிலும் ஒவ்வொருவரையும் நியமிப்பதாக சபாநாயகர் அறிவித்தார்.

ஆளும் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பிற்கே தெரிவுக்குழுவில் பெரும்பான்மை உறுப்பினர்கள் வழங்கப்பட வேண்டும் என்ற பாராளுமன்ற சம்பிரதாயத்தை சபாநாயகர் மீறியுள்ளார், சபாநாயகர் ஐக்கிய தேசியக்கட்சி சார்பாக செயற்படுகின்றாரெனக் கூறி ஆளுந்தரப்பினர் சபையிலிருந்து வெளியேறினர். அதன்பின்னர் பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பான சபாநாயகரின் முடிவு பாராளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு, அதற்கு ஆதரவாக 121 வாக்குகள் அளிக்கப்பட்டன.

25.11.2018:
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் வெளிநாட்டு ஊடகவியலாளர்களைச் சந்தித்தார். புதிய பிரதமரை நியமித்தது, முன்னாள் பிரதமரை பதவியிலிருந்து நீக்கியது, பாராளுமன்றத்தை கலைத்தது மற்றும் ஒத்திவைத்தது, அமைச்சரவையை கலைத்தது போன்ற தன்னால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் சட்டபூர்வமாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அரசியலமைப்பிற்கு முரணான எந்தவொரு நடவடிக்கையையும் தான் மேற்கொள்ளவில்லை என்றும் ஜனாதிபதி வெளிநாட்டு ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, ரணில் விக்ரமசிங்கவை மீண்டும் பிரதமராக நியமிக்கப்போவதில்லை என்றும் அது தொடர்பாக தான் ஐக்கிய தேசியக் கட்சிக்கு தெளிவாக தெரிவித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

ரணில் விக்ரமசிங்க பிரதமர் பதவியில் இருந்தபோது அதாவது 2015 முதல் 2018 ஒக்டோபர் மாதம் 25 ஆம் திகதி வரை அரசாங்கத்தில் இடம்பெற்ற மத்திய வங்கி நிதி மோசடி போன்ற ஊழல், மோசடிகள், முறைக்கேடுகள் தொடர்பில் கண்டறிவதற்கு ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை நியமிப்பதன் மூலம் குறித்த ஊழல், மோசடி, முறைக்கேடுகள் தொடர்பில் மக்களுக்கு அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும் என்றும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

26.11.2018:
பாராளுமன்றத்தை கலைப்பது தொடர்பில் ஜனாதிபதியினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்புக்கு எதிராக முன்வைக்கப்பட்ட மனுக்களை விசாரணை செய்வதற்காக பிரதம நீதியரசர் நலின் பெரேரா தலைமையில் உச்சநீதிமன்ற நீதிபதிகள் 7 பேர் அடங்கிய நீதிபதிகள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. விசாரணைகள் டிசம்பர் 5, 6, 7ந் திகதிகளில் நடைபெறவுள்ளன.